ஜெபம்

பொருளடக்கம்

அதிகாரம்		பக்கம்
ஜெபத்தின் உள்ளடக்கம்	...	1
ஜெபத்தின் வளர்ச்சி	...	22
எவ்விதம் ஜெபம்பண்ண வேண்டும்?		...36
நாம் ஏன் ஜெபம்பண்ண வேண்டும்?		...70

அதிகாரம் 1

ஜெபத்தின் உள்ளடக்கம்

ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஜெபம் மிக முக்கியமானதாகும். சில பரிசுத்தவான்கள் ஜெபத்தை மனுஷருடைய சுவாசத்திற்கு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" என்று அப். பவுல் கூறியிருக்கிறார் (I தெச. 5 : 17). அன்றியும் அவர் தீமோத்தேயுவுக்கு அநேக புத்திமதிகளை எழுதியிருப்பினும், அவற்றுள் "பிரதானமாய்ச்" சொன்ன புத்திமதி ஜெபத்தைக் குறித்ததாகும். "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்" என அவர் கூறுகிறார் (I தீமோ. 2 : 1). ஆகவே, மிக முக்கியமான இவ்விஷயத்தை நாம் கருத்தாய் ஆராய வேண்டும்.

'ஜெபம்' என்பது ஒரே வார்த்தையாயிருந்தாலும், அது நான்கு அம்சங்களைக் கொண்டதாயிருக்கிறது. உதாரணமாக, 'சோறு சாப்பிட்டேன்' என்று சொல்வது, அதனுடன் சேர்த்து உட்கொண்ட எல்லாவற்றையும் குறிக்கிறது. அவ்விதமே பொதுவாக ஜெபம் என்று அறியப்படுவது, விண்ணப்பம், ஜெபம், வேண்டுதல், ஸ்தோத்திரம் ஆகிய நான்கு அம்சங்களைக் கொண்டது என்பதை நாம் மேற்கூறிய வசனத்தில் காண்கிறோம். ஜெபத்தின் இந்நான்கு அம்சங்களைப் பற்றிய சரியான அறிவுடன், மத்தேயு 6 : 9 - 13 - இல் குறிப்பிடப்பட்டுள்ள, 'கர்த்தருடைய ஜெபம்' என அழைக்கப்படும் ஜெபத்தை நாம் வாசிப்போமாகில், நம்முடைய கர்த்தர் இவை நான்கினையும் அதனுள் அடக்கி, மாதிரியான ஒரு ஜெபத்தைக் கற்பித்திருக்கிறார் என அறிந்துகொள்ளலாம். கர்த்தர் ஒரு 'மாதிரியாக' மாத்திரம் அந்த ஜெபத்தைக் கற்பித்தபடியினால் ஆதிச் சபையின் கிறிஸ்தவர்கள் அதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கவில்லை. இக்காலத்திலும் சில கிறிஸ்தவர்கள் அவ்வாறு செய்வதில்லை.

(இவ்விஷயத்தின் விளக்கத்தை நாம் பின்பு தெளிவாய்க் கவனிப்போம்). எனினும் இந்நான்கு அம்சங்களும் அவர்களுடைய ஜெபத்தில் அடங்கியிருக்கின்றன.

பழைய ஏற்பாட்டுச் சபையின் எழுத்திற்குரிய ஆராதனையில் அவர்கள் கர்த்தருக்குச் செலுத்திவந்த தூபவர்க்கம் புதிய ஏற்பாட்டின் ஜெபத்திற்கு நிழலாட்டமாயிருக்கிறது (சங். 141 : 2). இந்தத் தூபவர்க்கமானது சுத்த வெள்ளைப்போளம், குங்கிலியம், அல்பான் பிசின், சாம்பிராணி என்னும் நான்கு பொருட்களால் செய்யப்பட்டது (யாத். 30 : 34 - 36). இவை நான்கும் முறையே, விண்ணப்பம் (supplication), ஜெபம் (prayer), வேண்டுதல் (intercession), ஸ்தோத்திரம் (thanksgiving and praising) ஆகிய ஜெபத்தின் நான்கு அம்சங்களைக் குறிக்கின்றன. (இவைகளைக் 'கர்த்தருடைய ஜெபத்திலும்' நாம் காணலாம்). இவற்றை நாம் ஆராய்வோம்.

வெள்ளைப்போளம் - விண்ணப்பம்

வெள்ளைப்போளம் ஒருவித மரத்தைக் காயப்படுத்துவதால் (குத்துவதால்) அதிலிருந்து வரும் பிசின் ஆகும். இந்தப் பிசின் அதிகக் கடினமானதல்ல. இது மிகக் கசப்பாக இருக்கும். அன்னாள், தன் புருஷனால் அதிகமாய் நேசிக்கப்பட்டவளாயிருந்தபடியால் அவள் பிள்ளையற்றவளாயிருந்தபோதிலும் அவள் தன் ஜீவியத்தில் விண்ணப்பமோ ஜெபமோ அற்றவளாக இருந்தாள். ஆனால் அவளுடைய சக்களத்தி அவள் பிள்ளையற்றவளாயிருந்ததைச் சுட்டிக்காட்டி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்தியபோது அவள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருந்தாள் (I சாமு. 1 : 6, 7). இவ்விதமாய் அன்னாள் வேதனைப்படுத்தப்பட்டபோது விண்ணப்பம் பண்ணினதாக நாம் காண்கிறோம் (வச. 10, 11, 16, 17, 27). அன்றியும், யோசியா ராஜா, தேசத்திற்கும் அதின் குடிகளுக்கும் விரோதமாகக் கூறப்பட்ட தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டபோது, துக்கத்தால் தன் வஸ்திரங்களைக் கிழித்து, அழுது விண்ணப்பம் செய்தான் (II நாளா. 34 : 27). அவ்விதமே, தாவீதும் ஆபத்து நாளிலே விண்ணப்பம் செய்தான் (சங். 17 : 1 ; 102 : 1, 2). இவ்விதம் இவர்கள் மனங்கசந்து செய்த விண்ணப்பங்கள் வெள்ளைப்போளத்தின் கசப்பான தன்மைக்கு ஒப்பாயிருக்கின்றன.

இவ்வெள்ளைப்போளம் கடினமாயிராதது போல விண்ணப்பத்தில் நாம் தேவனிடம் பலவந்தம்பண்ணிக் கேட்க இயலாது. உதாரணமாக, ஒருவன் ஒரு வேலைக்காக அல்லது பிச்சைக்காகத் தன்னைத் தாழ்த்தி, கெஞ்சி, வருந்திக் கேட்கிறான். அவன் அதிகாரத்தோடும் உரிமையோடும் பலவந்தமாய்க் கேட்கக் கூடாதவனாயிருக்கிறான். இதுவே விண்ணப்பம். அன்னாள் மனங்கசந்து கேட்டாலும், 'தாரும்' என்று பலவந்தமாய்க் கேட்கக் கூடாதவளாக, "பிள்ளையைக் கொடுத்தால்" என்று விண்ணப்பம் பண்ணினாள். ஏலியும் தேவன் கட்டளையிடுவார் என்று உறுதியாய்ச் சொல்லாது, "உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக" என்று சொன்னான். அன்றியும், 'கர்த்தருடைய ஜெபத்தில்', ஜெபத்தின் முதற்பகுதியாகிய விண்ணப்பத்தில், "பரிசுத்தப்படுவதாக", "வருவதாக", "செய்யப்படுவதாக" என்னும் பலவந்தமற்ற வார்த்தைகளையே நாம் காண்கிறோம் (மத். 6 : 9,10).

இவ்விதம் நம் ஜீவியத்தில், பல குறைவுகள், கஷ்டங்கள், பட்டயக்குத்துகள் போன்ற வார்த்தைகள், நிந்தை முதலிய கசப்பான அனுபவங்களைச் சந்திக்கும்போது நாம் சோர்ந்து போகாமல் விண்ணப்பம்

செய்ய வேண்டும். கசப்பு, வேதனை முதலியவை நம் ஜீவியத்தில் வருவதற்குத் தேவன் இடங்கொடுப்பதன் நோக்கம், அன்னாளைப் போல் விண்ணப்பம் செய்யாதிருக்கும் குறையிலிருந்து நீங்கலாகி விண்ணப்பம் செய்வதில் பெருக வேண்டும் என்பதேயாகும். இவ்வித விண்ணப்பங்களில், கர்த்தராகிய இயேசு கற்பித்தது போல், “உம்முடைய சித்தம் … செய்யப்படுவதாக” என்று தேவசித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்து விண்ணப்பம் செய்ய வேண்டும் (மத். 6 : 10). அவ்வாறு நாம் தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து விண்ணப்பம் செய்தால், துக்கம் நீங்கி நமக்குள் சந்தோஷம் உண்டாகும் (I சாமு. 1 : 18).

குங்கிலியம் - ஜெபம்

குங்கிலியம் என்னும் பொருள், சமுத்திரத்தின் பாறைகளில் காணப்படும் பாசி போன்றதைத் தின்று ஜீவிக்கும் ஒருவித பிராணியிலிருந்து எடுக்கப்படுவதாகும். இப்பிராணிக்கு மிகக் கடினமான ஓடு (shell) உண்டு. வாசனையுள்ள இந்த ஓடு, பொடியாக்கப்படுவதால் கிடைக்கும் தூளே குங்கிலியம் எனப்படும். பொதுவான ஜெபத்தின் இரண்டாம் பகுதியாகிய ‘ஜெபம்’ என்பது, எப்போதும் ஊக்கம் (கடினம்) உள்ளதாக இருக்கிறது. ஆகையாலேயே யாக்கோபு 5 : 17- இல், எலியா “கருத்தாய் ஜெபம்பண்ணினான்” என்று நாம் வாசிக்கிறோம். ஜெபம் என்பது ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்காகக் கர்த்தரிடத்தில் நாம் பலவந்தமாய்ப் போராடுவதாகும். ஆகவே அப்போஸ்தலனாகிய பவுல், “நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராடவேண்டுமென்று … உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் ” என்று எழுதுகிறார் (ரோமர் 15 : 32).

குங்கிலியம் பொடியாக இருந்தாலும் அது கடினத்தன்மையுள்ளதாய் இருப்பதுபோல, நொறுங்குண்ட இருதயத்திலிருந்து (சங். 34 : 18). உறுதியான - ஊக்கமான - தீர்மானமுள்ள ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும்; அதாவது, ஜெபத்தில் நாம் போராட வேண்டும். இவ்வித ஜெபத்திற்கு உடனே பதில் கிடைக்கிறது. யாக்கோபு, “நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்” என்று தேவனோடு மிகுந்த தைரியத்தோடு போராடினான் (ஆதி. 32 : 26). அவன் விடாப்பிடியாய் உரிமைபாராட்டி ஜெபம்பண்ணி, உடனடியாக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான் (வச. 29). ‘கர்த்தருடைய ஜெபத்தின்’ இரண்டாம் பகுதியாகிய ‘ஜெபத்தை’ மத்தேயு 6 : 11 - இல் நாம் பார்க்கிறோம். அதில், “எங்களுக்குத் தாரும்” என்னும் அதிகாரமும் உரிமையுமுள்ள சொற்றொடர், குங்கிலியத்தின் உறுதியைக் காட்டுகிறது அல்லவா? ஆகவே பொதுவாக ஜெபம் என்று அறியப்படுவதிலுள்ள இரண்டாம் அம்சமாகிய ‘ஜெபம்’, பிள்ளைகள் தகப்பனிடத்தில் கேட்பது போன்ற உரிமையுடனும் அதிகாரத்துடனும் செய்யப்பட வேண்டும்.

பொதுவான ஜெபத்தின் முதற்பகுதியாகிய விண்ணப்பத்தில், நாம், ‘உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக’ என்று தேவசித்தம் செய்ய ஒப்புக்கொடுத்து விண்ணப்பம்பண்ணும்போது, அவ்விஷயத்தைப் பற்றிய தேவசித்தம் வெளிப்படுகிறது. அவ்விதம் தேவசித்தம் இன்னதென்று வெளிப்பட்ட பின்பு, நாம் பயத்திற்கும் அவிசுவாசத்திற்கும் இடங்கொடாது, போராடி ஜெபம்பண்ணி, அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சிலர் இவ்விதமாகப் போராடி ஜெபம்பண்ணாத காரணத்தால்

அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறார்கள். இவ்விதம் போராடி ஜெபம்பண்ணும் ஜெபத்திற்கு எப்போதும் பல தடைகள் வந்து கொண்டிருக்கும். ஆகையாலேயே 'ஜெபம்பண்ணக் கடினமாகத் தோன்றும்போது, போராடி ஜெபம்பண்ணுங்கள்' ('When it is hard to pray, pray hard') என ஒரு பக்தன் கூறியிருக்கிறார். இவ்வனுபவத்தைத் தானியேலின் ஜீவியத்தில் நாம் காணலாம். இராஜாவின் கட்டளை அவனுக்கு விரோதமாயிருந்தபோதிலும் அவன் அதற்குப் பயப்படாது, பலகணிகளைத் திறந்துவைத்து ஜெபம்பண்ணினான். அதனால் சிங்கங்கள் அவனைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளுடைய வாயைக் கட்டிப்போட்டார் (தானி. 6 : 10, 22). தானியேலின் தேவன், பட்சபாத மில்லாதவராய் நம்முடன் இன்றும் இருக்கிறார். எலியாவுங்கூட ஊக்கமாய் ஜெபம்பண்ணினபடியால் தேவன் அவனுடைய ஜெபத்தைக் கேட்டு மழையைப் பொழிந்தருளினார் (யாக். 5 : 17). இவ்விதமாய் ஊக்கத்துடன் ஜெபத்தில் போராடுகிற அனுபவத்தை நீங்களும் உங்களுடைய ஜீவியத்தில் தைரியத்துடன் இன்றே ஆரம்பிப்பீர்களாகில், தேவன் எலியாவின் ஊக்கமான ஜெபத்தைக் (earnest prayer) கேட்டு மழையைப் பொழிந்தருளினதுபோல, உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் தேவையான ஆவிக்குரிய, சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்களாகிய மழையை நிச்சயமாகவே சீக்கிரமாகப் பொழிந்தருளுவார். "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபி. 4 : 16).

அல்பான் பிசின் - வேண்டுதல்

அல்பான் பிசின் ஒருவித மரத்திலிருந்து கிடைக்கும் பிசின் ஆகும். வெள்ளைப்போளம், குங்கிலியம், அல்பான் பிசின் இவை மூன்றும் கந்தவர்க்கங்களாகும். அல்பான் பிசின், ஈக்கள் அணுக முடியாத ஒருவித வாசனையையுடையது. தூபவர்க்கத்தில் இது சேர்ந்திருப்பதால் ஈக்கள் தூபவர்க்கத்தை அணுகாமல் இதன் வாசனை அவைகளினின்று அதைக் காக்கிறது. அல்பான் பிசின், ஜெபத்தின் மூன்றாவது அம்சமாகிய 'வேண்டுதலுக்கு' நிழலாயிருக்கிறது. வேண்டுதல் (intercession) என்பது ஒரு நபர் மற்றொரு நபருக்காக வேறொருவரிடம் வேண்டிக்கொள்வதாகும். யோபு, புத்தியீனமாய்ப் பேசிய தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டு, அவர்களை அவர்கள் புத்தியீனத்துக்குத்தக்கதாக நடத்தாதிருந்தார். மேலும் கர்த்தர் அவன் சிறையிருப்பைத் திருப்பினார் (யோபு 42 : 8,10).

தூபவர்க்கத்திலிருக்கும் அல்பான் பிசின் வியாதிக்கிருமிகளைப் பரப்பும் ஈக்களிலிருந்து தூபவர்க்கத்தைக் காத்துக் கொள்ளுகிறது. அவ்விதமே மனுஷருடைய ஜீவியத்தில் புத்தியீனத்தால் வரக்கூடிய பாவங்களைத் தவிர்க்கும்படியாகப் பொதுவான ஜெபத்தின் மூன்றாவது பகுதியான 'வேண்டுதல்' ஏறெடுக்கப்படுகிறது. ஆகையால் 'கர்த்தருடைய ஜெபத்திலும்', மூன்றாம் பகுதியாகிய வேண்டுதலில், "எங்களுக்கு மன்னியும்" என்றும், அதைத் தொடர்ந்து, "தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்றும் நாம் காண்கிறோம் (மத். 6 : 12, 13). கர்த்தராகிய இயேசு, "நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று தம்முடைய சீஷர்களுக்காகப் பிதாவிடம் வேண்டுதல் செய்தார்

(யோவான் 17 : 15). அன்றியும் அப். பவுல், பிலிப்பிய சபையாருக்காக, அவர்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக் கவும், தான் வேண்டுதல் செய்வதாகக் கூறுகிறார் (பிலி. 1 : 11).

அன்றியும் அல்பான் பிசின் பாதுகாக்கும் தன்மையுள்ளதாயிருப்பதுபோல, நாம் நமது சொந்த ஜீவியத்தின் பரிசுத்தத்துக்காக ஜெபம்பண்ணுவது மாத்திரமல்ல, மற்றவர்களுடைய அறியாமைகள், பெலவீனங்களுக்காகவும் வேண்டுதல் செய்ய வேண்டும். கர்த்தராகிய இயேசு தாம் பாவமற்றவராய் இருந்தபோதிலும், அப்போது உலகத்திலிருந்த தம்முடைய சீஷர்களுக்காக வேண்டிக்கொண்டார். இப்போது நம் ஒவ்வொருவருக்காகவும், பிதாவின் வலதுபாரிசத்திலிருந்து அவர் வேண்டுதல் செய்கிறார் (எபி. 7 : 25 ; ரோமர் 8 : 34). இதனாலேயே, நம் ஜீவியத்தில் பல பெலவீனங்களிருப்பினும் நாம் அழிந்து போகாமல் இம்மட்டும் நிலைநிற்கிறோம். நாமும் மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்ய வேண்டுமென்று ஆவியானவர் எதிர்பார்க்கிறபடியினாலேயே, ஜெபத்தில் 'வேண்டுதல்' என்னும் ஒரு பகுதியைத் தேவன் வைத்திருக்கிறார். மற்றவர்களுடைய குறைகளைக் குறித்துப் பேசாது அவர்களுக்காக நாம் வேண்டுதல் செய்ய வேண்டும். அன்றியும் பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்யவேண்டுமென்பது ஆவியானவரால் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள கட்டளையாகும் (எபே. 6 : 18). அவ்வாறு நீங்கள் மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்யும்போது, உங்களுடைய வேண்டுதலினால் மற்றவர்களுக்கு நன்மை உண்டாவதுடன், யோபைப் போல நீங்கள் உங்கள் சிறையிருப்பினின்று விடுதலையாக்கப்பட்டு, ஆவிக்குரிய, சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்களை இரட்டிப்பாகப் பெற்றுக் கொள்ளுவீர்கள்.

சாம்பிராணி - ஸ்தோத்திரமும் துதியும்

நம்மில் அநேகருக்குத் தெரிந்திருக்கிறபடியே, சாம்பிராணி அநேகமாய் அரேபியாவிலும் இந்தியாவின் சில பகுதிகளிலும், பளிங்குக் கற்களின் மத்தியில் வளருகிற ஒருவித மரத்தின் பட்டையைக் குத்துவதால் கிடைக்கும் வாசனை பொருந்திய பிசின் ஆகும். இது நெருப்பில் போடப்படும்போது தன் வாசனையை வெளிப்படுத்தி, புகையாக மேலே எழும்புகிறது. இந்தச் சாம்பிராணி, ஜெபத்தின் நான்காம் அம்சமாகிய 'ஸ்தோத்திரம் செய்தலுக்கு' ஒப்பாயிருக்கிறது. 'கர்த்தருடைய ஜெபத்தில்' கர்த்தராகிய இயேசு, வேண்டுதலுக்குப் பின்பு நான்காவது பகுதியாக, "ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென் " என்று பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதை நாம் காண்கிறோம் (மத். 6 : 13). ஆ! கர்த்தருடைய வசனம் எவ்வளவு பூரணமானது! அக்கினியில் சாம்பிராணியைப் போட்டவுடன் எப்படிப் புகை மேலே எழும்புகிறதோ, அப்படியே ஒருவன் தன் ஜீவியத்தில் வந்த பெலவீனங்களுக்காக வேதனையுடன் வேண்டிக்கொண்ட பின்பு, அவன் அக்கினியாகிய தேவ சந்நிதானத்தில் இருந்தால், தேவன் தன்னை நித்திய அழிவிலிருந்து விடுவித்துக் காத்தாரே என்னும் எண்ணத்தால் நன்றியால் நிறைந்து தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறான். உண்மையான கிறிஸ்தவர்களுடைய ஜெபங்களில் மிகுதியான ஸ்தோத்திரம் செலுத்தப்படுவதை நாம் கவனிக்கலாம். ஜெபத்தில் ஸ்தோத்திரம் மிக முக்கியமானது.

இவ்விதம் ஸ்தோத்திரம் செலுத்துவது, நம்முடைய ஜெபத்திற்குத் தேவன் பதில் தந்தார் என்று நாம் விசுவாசிப்பதற்கு அறிகுறியாகும். தானியேல், தன் ஜெபத்தைத் தேவன் கேட்டுப் பதில் தந்தார் என்று

விசுவாசித்தபடியால் தன் ஜெபத்தை ஸ்தோத்திரத்துடன் முடித்தான் (தானி. 6 : 10). தேவன் அவன் விசுவாசத்தைக் கனம்பண்ணி, அவனது ஸ்தோத்திரத்தை ஏற்றுக்கொண்டார். எனவே, "அவன் தன் தேவன்பேரில் விசுவாசித்திருந்தபடியால், அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை" என்று நாம் வாசிக்கிறோம் (வச. 23). இவ்விதம் விசுவாசம் இருந்தால் மட்டுமே ஸ்தோத்திரம் செலுத்த முடியும்.

தேவனுடைய பிள்ளைகள் சிலர் ஜெபத்தில் ஸ்தோத்திரம் செலுத்தப் பழகாதபடியால் ஜெபம்பண்ணின பின்பு எவ்வித சந்தோஷமுமின்றி இருக்கிறார்கள். ஜெபம்பண்ணும் முன்பு அவர்களுடைய இருதயம் எவ்விதம் பாரமாயிருந்ததோ, அவ்விதமே ஜெபம்பண்ணின பிறகும் பாரமாயிருக்கிறது. இவ்விதமாக ஜெபம்பண்ணுவதால் யாதொரு பிரயோஜனமுமில்லை. அன்னாள் விண்ணப்பம்பண்ணும் முன்பு 'கிலேசமுள்ளவளாகவும் ', 'சாப்பிடாதவளாகவும்', 'அழுகிறவளாகவும்' இருந்தாள். ஆனால் விண்ணப்பம்பண்ணின பின்பு அவள் போஜனம் செய்தாள். "அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை " (I சாமு. 1 : 18). இவ்விதமாய், அவள் ஜெபம்பண்ணின பின் சந்தோஷமாயிருந்ததைப் பார்த்த தேவன், "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்" என்ற வசனத்தின்படியே (சங். 37 : 4), அவளுக்குச் செய்தருளினார். அவ்விதமே, ஸ்தோத்திரத்தால் எரிகோவின் அலங்கங்கள் இடிந்து விழுந்தன என்றும், இஸ்ரவேலர் பட்டணத்தைப் பிடித்தார்கள் என்றும் நாம் அறிவோம். நீங்களும் அவ்விதமே துதிப்பீர்களாயின், தேவன் தடைகளை நீக்கி, அடைக்கப்பட்ட வாசல்களைத் திறந்து, உங்களை ஆசீர்வதிப்பார்.

அன்றியும், யோசபாத், ஏராளமான சத்துருக்களுக்கு முகங்காட்டினபோது முதலாவது கர்த்தரைத் தேடி, "எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது" என்று சொல்லி ஜெபம்பண்ணினான் (II நாளா. 20 : 1, 3 - 12). அப்போது தீர்க்கதரிசியின் மூலமாக அவனும் ஜனங்களும் தைரியப்படுத்தப்பட்டார்கள். இருப்பினும் அவர்கள் யுத்தம் செய்யப்போகாமல் கர்த்தரை மகா சத்தத்தோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள் (வச. 19). இவ்விதம் "அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, ... அவர்கள் (சத்துருக்கள்) வெட்டுண்டு விழுந்தார்கள்" (வச. 22). ஆ! எவ்வளவு ஆச்சரியம்! துதியின் வல்லமை தான் என்னே! யோசபாத்திற்கு விரோதமாக மூன்று தேசத்தார் யுத்தம்பண்ண வந்ததுபோல நம் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு விரோதமாக உலகம், மாம்சம், பிசாசு ஆகியவை போராடும்போது நாமும் இவ்விதம் ஜெயம் பெற்றுக் களிகூரலாம். மேலும், யோசபாத்தும் அவனுடைய ஜனங்களும், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்; ... கர்த்தர் அவர்களை அவர்கள் சத்துருக்கள்பேரில் களிகூரச்" செய்தார் எனவும் நாம் வாசிக்கிறோம் (வச. 26, 27). நீரும் இவ்விதம் கர்த்தரைத் துதிப்பீரேயாயின், பட்சபாதம் இல்லாத தேவன் உமக்கும் யாவற்றிலும் முற்றிலும் ஜெயமளித்து, உம்மைக் களிகூரச் செய்வார். ஆகவே கர்த்தரைத் துதிக்க மறவாதீர்!

நாம் இதுவரை ஆராய்ந்தவற்றிலிருந்து ஜெபத்தின் நான்கு அம்சங்களின்படியே 'கர்த்தருடைய ஜெபம்' எவ்வளவு ஒழுங்காக வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிகிறோம். அன்றியும் கர்த்தராகிய இயேசு, 'கர்த்தருடைய ஜெபத்தைத்' திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டுமென்று சொல்லாமல், "ஜெபம்பண்ண

வேண்டியவிதமாவது" என்று ஒரு 'மாதிரி' ஜெபத்தையே அவர்களுக்குக் கற்பித்தார்.

பள்ளியில் கணக்கு செய்யும் 'விதத்தை' படிப்பிக்கும் பொருட்டு, ஆசிரியர் ஒரு 'மாதிரி' கணக்கைப் போதித்தால், அதே கணக்கைத் திரும்பத் திரும்பச் செய்ய வேண்டுமென்பது பொருளல்ல. கொடுக்கப்படும் கணக்குகளை அவ்வொழுங்கின்படி அக்கணக்குகளிலுள்ள வெவ்வேறு எண்களை உபயோகித்துச் செய்ய வேண்டும் என்பதே பொருள். அவ்விதமே 'கர்த்தருடைய ஜெபத்தைத்' திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு, I தீமோத்தேயு 2 : 1 - இல் கூறப்பட்டுள்ள ஜெபத்தின் ஒழுங்கைக் கர்த்தராகிய இயேசு தம்முடைய மாதிரியான ஜெபத்தில் காண்பித்திருப்பதால், இவ்வித ஒழுங்கைக் கையாண்டு ஜெப ஜீவியத்தில் வளருவீர்களாக. அதற்கு மாறாக, மாதச் சம்பளம், வீட்டில் போதிய அளவு அரிசி, மற்றும் பொருட்கள் எல்லாம் வைத்துக்கொண்டும், திருப்தியாகச் சாப்பிட்ட பின்பும், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று ஜெபம் பண்ணுவதும், மற்றவர்கள் செய்த சில தீமைகளை மன்னியாது, உள்ளத்தில் கசப்பை வைத்துக்கொண்டு அல்லது நீதிமன்றத்தில் அவர்களுக்கு விரோதமாய் வழக்குத் தொடர்ந்துகொண்டு, "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்று ஜெபம்பண்ணுவதுமாகிய மாய்மாலமான, பொய்யான ஜெபம் செய்து தேவனைப் பரியாசஞ் செய்யாதிருங்கள். நீதிமொழிகள் 15 : 8 - இல், "செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்" என்று நாம் வாசிக்கிறோம். எனவே ஏறெடுக்கப்படும் எல்லா ஜெபங்களும் தேவனுக்குப் பிரியமானவையல்ல. தேவ ஒழுங்குக்கு விரோதமான ஜெபத்தைத் தேவன் 'பாவமாகவும்', 'அருவருப்பாகவும்' எண்ணுவார் என்பதை மறவாதீர் (சங். 109 : 7 ; நீதி. 28 : 9). ஆகவே நீங்கள் ஏறெடுக்கும் ஜெபத்தைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்.

ஜெபத்தைக் குறித்து மற்றொரு அறிவும் நமக்கு மிகத் தேவை. மோசே, மலையில் தேவனுடன் சம்பாஷித்தது, நாம் கர்த்தருக்குக் காத்திருந்து அறைவீட்டில் ஜெபம்பண்ண வேண்டிய ஜெபத்தைக் காட்டுகிறது (மத். 6 : 6). சாதாரணமாக, 'நாம் தேவனை நோக்கி' ஜெபம்பண்ணுகிறோம். ஆனால் மோசே தேவனிடம் மலைக்குப் போனபோது, "மோசே கர்த்தரை நோக்கி" என்னும் வார்த்தைகள் ஒரு சில இடங்களில் மாத்திரமும், "கர்த்தர் மோசேயை நோக்கி" என்னும் வார்த்தைகள் அடிக்கடியும் வருவதை நாம் காண்கிறோம். இதிலிருந்து, மோசே கர்த்தரிடம் சில காரியங்களைச் சொன்ன பின்பு, தேவன் தன்னோடு பேசுவதை அவன் கேட்டுக்கொண்டிருந்தான் என்று நாம் அறிகிறோம். நம் தேவன் நம்மோடு பேசுகிற தேவன்! ஆகவே காத்திருந்து ஜெபம்பண்ணி அவர் சத்தத்தைக் கேட்கும் அனுபவம் நமக்கு மிகவும் அவசியம்.

இவ்விதம் காத்திருந்து ஜெபம்பண்ணும்போது சிலரைப் போல அதிக வசனிப்புச் செய்யாது (மத். 6 : 7), கர்த்தர் சொல்லுவதை நாம் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். இப்படி நாம் பழகுவோமாயின் நம் ஜீவியத்தில் உண்டாகும் பல பிரச்சினைகளில் அவரது ஆலோசனைகள் நம்மைப் பாதுகாக்கும்.

யாத்திராகமம் 30 : 34 - 38 - இன் அடிப்படையில் ஜெபமாகிய தூபவர்க்கத்தின் நான்கு அம்சங்களை நாம் ஆராய்ந்தோம். இவ்வசனங்களைத் தொடர்ந்து ஆராய்வதின் மூலம், ஜெபத்தில் கவனிக்க

வேண்டிய வேறு சில முக்கியக் குறிப்புகளையும் நாம் கற்றுக்கொள்ளலாம்.

34 - ஆம் வசனத்தில் தூபவர்க்கத்தில் சேர்க்கப்படும் பொருட்கள், "சமநிறையாக" இருக்க வேண்டும் என்று நாம் காண்கிறோம். பலராகச் சேர்ந்து ஜெபம்பண்ணும் ஜெபக்கூட்டங்களில் மிகுதியான பலன் உண்டாக வேண்டுமாயின், ஜெபத்தில் ஐக்கியப்படுகிறவர்கள் ஒரே ஆவிக்குரிய நிலையிலுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் ஒருமனமாக ஜெபம்பண்ண முடியாது. உதாரணமாக, ஒருவன் ஆவிக்குரிய ஆழமான அனுபவத்திற்காக ஜெபம் பண்ணுகிறபோது, இன்னொருவன் தன் உத்தியோகத்திற்காகவும், மற்றொருவன் தனது மனைவி, பிள்ளைகளுக்காகவும், வேறொருவன் தன் சத்துருக்களுக்குத் தேவன் பாடம் கற்பிக்க வேண்டும் என்றும், இவ்விதம் பலர் பல காரியங்களுக்காக ஜெபம்பண்ணுகின்றனர் என வைத்துக்கொள்வோம். இவ்வித வித்தியாசமான 'நிறை'யினால் ஜெபத்தில் ஒருமனம் இல்லாமற் போகிறது. அவ்விதமின்றி, ஜெபம்பண்ண வேண்டிய ஒரு காரியத்துக்காக 'சமநிறை'யாக அதாவது ஒருமனதுடன் ஜெபம்பண்ணினால், "உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்" என்று கர்த்தராகிய இயேசு கூறியது நிறைவேறும் (மத். 18 : 19).

மேலும், யாத்திராகமம் 30 : 36 - இல், இந்தத் தூபவர்க்கம் பொடியாக இடிக்கப்பட்ட பின்பு தேவ சந்நிதானத்தில் கொண்டு வரப்படவேண்டுமென்று நாம் பார்க்கிறோம். ஆகவே தேவ சந்நிதானத்தின் இன்பத்தை நாம் அனுபவிக்க வேண்டுமாயின், பொடியாக இடிக்கப்படுதலைப் போன்ற, நொறுங்குண்ட இருதயம் நமக்குத் தேவை. இதைக் குறிப்பிடும் பொருட்டாகவே தாவீது, "நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்" என்கிறான் (சங். 34 : 18). அன்றியும், தேவன் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக, "பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்" என்கிறார் (ஏசாயா 57 : 15). ஆ! நொறுங்குண்ட இருதயத்தைத் தேவன் எவ்வளவாய் நேசிக்கிறார்! "உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும்" வாசம் பண்ணுகிறவர், நொறுங்குண்ட இருதயத்தில் வாசம்பண்ண வருகிறாரே! ஆகவே, நண்பரே! நீர் மனுஷராலேயோ அல்லது சூழ்நிலைகளினாலேயோ நொறுக்கப்பட்டால், கலங்காது சந்தோஷமாய்க் கர்த்தரிடம் சேருவீராக.

அடுத்தபடியாக, யாத்திராகமம் 30 : 37 - இல், "இந்தத் தூபவர்க்கத்தை ... உங்களுக்காகச் செய்துகொள்ள லாகாது" எனக் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இதன் ஆவிக்குரிய பொருளை நம் நேசர் மத்தேயு 6 : 5, 16 - இல் வெளிப்படுத்தியிருப்பதை வாசிப்பது எவ்வளவு ஆனந்தம்! "நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம்பண்ண விரும்புகிறார்கள்"; "அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்". ஆம்! நிச்சயமாகவே தங்கள்

புகழ்ச்சிக்காக ஜெபம்பண்ணுவதும் உபவாசிப்பதுமான ஒரு கூட்டத்தார் உலகில் இருக்கிறார்கள். சிலர் சிறிதும் தனி ஜெபமின்றி, பொதுக்கூட்டங்களில் நீண்ட ஜெபம் செய்து தங்களைப் பெரிய ஜெபவீரர்கள் போல காண்பித்துக்கொள்கிறார்கள். வேறு சிலர், கூட்டங்களில் மற்றவர்களுக்கு ஜெபம்பண்ணத் தருணம் கொடாது, எப்போதும் கட்டாயமாய்த் தாங்களே ஜெபம்பண்ண வேண்டுமென்று விரும்புகிறார்கள். சிலர் ஜெபத்தில் பிரசங்கம் செய்கிறார்கள். இன்னும் சிலர் ஜெபத்தில் தங்களுக்குத் தெரிந்த நல்லஅடுக்கு மொழிகளை உபயோகித்து, அதைத் தங்கள் பாஷை சாமர்த்தியத்தைக் காட்டும் ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொள்கிறார்கள். இவை யாவும் தங்களுக்காகத் தூபவர்க்கத்தை உண்டுபண்ணுவதாகும்.

D.L. மூடி என்ற போதகர் ஒரு கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தபோது மேற்கூறியவாறு ஒருவர் நீண்ட ஜெபம் செய்தார். அவருடைய ஜெபம் முடியாததால் கூட்டத்தில் சலசலப்பு உண்டாயிற்று. ஆகவே D.L. மூடி அவர்கள், 'நம் நண்பர் ஜெபம்பண்ணிக்கொண்டேயிருக்கட்டும்; நாம் ஒரு பாட்டு பாடுவோம்' என்று சத்தமாய்க் கூறி, ஒரு பாட்டை ஆரம்பித்தார். அங்கிருந்த சர். வில்பிரட் கிரன்பெல் என்பவர், கூட்டம் நடத்தியவரின் ஆவியின் நடத்துதலைக் கவனித்தார். D.L. மூடி அவர்களின் இச்செய்கை, கூட்டத்தை விட்டு எழுந்து வெளியே போய் விடலாம் என எண்ணியிருந்த அவரை அவ்விதம் செய்யாதவாறு தடுத்து நிறுத்தியது. பின்பு அவர் அக்கூட்டங்களில் ஊக்கம் காண்பித்து, இரட்சிக்கப்பட்டு ஒரு தேவமனுஷனாக மாறினார். ஆம்! இன்றைக்கும் இப்படிப்பட்ட ஜெபங்களுக்கு இவ்வித மாற்றுமருந்தைக் கொடுத்தால் பலர் நம் கூட்டங்களில் ஊக்கம் காண்பித்து, கர்த்தரிடம் வழி நடத்தப்படுவார்கள் என்பது நிச்சயம்.

தூபவர்க்கத்தைக் குறித்துக் கடைசியாக யாத்திராகமம் 30 : 38 - இல், "இதற்கு ஒப்பானதை முகருகிறதற்காகச் செய்கிறவன் தன் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டுபோகக்கடவன்" என்று கூறியிருப்பது நம்மை நடுங்கப் பண்ணுகிறதன்றோ ! சிலர் தங்கள் ஜெபங்களைக் குறித்துத் தாங்களே சிந்தித்துப் பெருமையடைந்து, தங்களுக்குள் மேன்மைபாராட்டிக்கொள்கிறார்கள். இவ்விதச் சிந்தை, சில நாட்களுக்குள் தங்களைக் குறித்துத் தாங்கள் பெரிய ஜெபவீரர் என எண்ணிப் பெருமையடையவும், மற்றவர்களை அற்பமாய் எண்ணவும் இவர்களை வழிநடத்தும். இவர்கள் இந்நிலைக்கு வரும்போது, "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்" என்பதற்கிணங்க (I பேதுரு 5 : 5), கொஞ்சங்கொஞ்சமாகக் கிருபையை இழந்து போகின்றனர்; இவர்களது ஆவிக்குரிய அனுபவங்களுக்கு மரணம் சம்பவிக்கிறது. கடைசியாகப் பின்மாற்றக்காரராய் தேவ ஜனங்களை விட்டு நீங்கிப் (அறுப்புண்டு) போவாரும் உண்டு. ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் கர்த்தர் கட்டளையிடாத அந்நிய அக்கினியைக் கொண்டு வந்தமையால், கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு அவர்கள் இருவரையும் பட்சித்தது. இவ்விதமாக அவர்கள் கர்த்தருடைய ஜனங்களிலிருந்து அறுப்புண்டு போனார்கள். ஆ! என்ன பரிதாபம்!

தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட வேண்டிய நேரத்தை நாம் யாத்திராகமம் 30 : 7, 8 - இல் காண்கிறோம்.

(1) காலைதோறும் : காலைதோறும் தூபங்காட்ட வேண்டும் என்பதிலுள்ள சத்தியத்தை நிரூபிக்கும் வகையில் கர்த்தராகிய இயேசு, "அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான

ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம் பண்ணினார்" (மாற்கு 1 : 35). இந்தச் சத்தியத்தை அறிந்த தாவீது, தன் விண்ணப்பத்தைத் தூபம் என்று கூறுகிறான் (சங். 141 : 2). இது காலைதோறும் செலுத்தப்பட வேண்டியதாகையால், சங்கீதம் 63 : 1 - இல், அவன், "தேவனே ... அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்" என்கிறான். இது உண்மையான பரிசுத்தவான்களுடைய அனுபவமாயிருக்கிறது. இவ்வுலகில் சிலர், காலையில் முதலாவது நல்லவர்களின் முகத்தைத் தரிசித்தால், அந்நாள் முழுவதும் நன்றாக இருக்குமென்றும், அப்படியில்லாவிட்டால் பல பாடுகள் உண்டாகுமென்றும் எண்ணுகிறார்கள். இதை எண்ணியோ எண்ணாமலோ, தாவீது தன் ஜீவியத்தில் ஒவ்வொருநாள் காலையிலும் தேவனுடைய முகத்தைத் தரிசிக்கும் பழக்கத்தைக் கைக்கொண்டான் (சங். 5 : 3). ஆகவே அவன், "நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" என்கிறான் (சங். 17 : 15). ஆ! என்ன பாக்கியம்! இவ்விதம் அதிகாலையில் தேவனைத் தேடி அவருடைய சாயலால் திருப்தியாகும் பழக்கம் அவனுக்கு இருந்தமையால், "நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல என் ஆத்துமா திருப்தியாகும்; என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்" என்று அவன் பாடி மகிழுகிறான் (சங். 63 : 5).

ஒருவன் காலையில் தனக்குத் தேவையான ஆகாரத்தைத் திருப்தியாகப் புசித்தால், அவன் பகலில் களைத்துப் போகாதிருப்பதுபோல நாம் அதிகாலையில் தேவனைத் தேடி அவருக்காகக் காத்திருந்து தாவீதைப் போல் அவருடைய சாயலால் திருப்தியாவோமாயின், பகலில் சோர்வு, சோதனை முதலியவற்றிற்குட்படாது, பகல் முழுவதும் ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால் அவரைத் துதித்துக்கொண்டேயிருக்கலாம். மேலும், காலைதோறும் கர்த்தருடைய கிருபைகள் புதியவைகள் என்று எரேமியா கூறுகிறான் (புல. 3 : 22, 23). ஒவ்வொரு புதியநாளிலும் நாம் எதிர்பாராத புதிய சோதனைகள், பிரச்சினைகள் நமக்கு வருகின்றன. இதை அறிந்த நமது நல்ல தகப்பன் இந்தப் புதிய சோதனைகளில் நாம் வெற்றிசிறக்க, காலைதோறும் நமக்காகப் புதிய கிருபைகளை வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார். நாம் காலைதோறும் ஜெபம்பண்ணினால், தேவன், "அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" என்னும் வாக்கை நிறைவேற்றி (நீதி. 8 : 17), நம் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே தமது கிருபையால் நம்மைத் திருப்தியாக்குவார் (சங். 90 : 14). ஆ! என்ன இன்ப ஜீவியம்!

இவ்வின்ப ஜீவியத்தை ருசித்த தேவமனுஷர், அதிகாலையில் தங்களுக்கு எவ்வளவு முக்கியமான, கடினமான வேலைகள் இருந்தாலும், அவ்வேலைகளுக்குள் பிரவேசிக்கும் முன்னதாகக் கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய சாயலாலும் கிருபையாலும் திருப்தியடைந்து, அதன்பின் பகலில் தங்கள் வேலைகளைச் சந்தோஷத்துடன் இலகுவாய்ச் செய்து முடிக்கின்றனர்.

நம்மில் சிலர் இவ்விதம் அதிகாலையில் எழும்ப விரும்பியும் தூக்கத்தால் மேற்கொள்ளப்பட்டுக் கலங்கித் துக்கமடையலாம். பிரியமானவர்களே! நாம் அவ்விதம் கலங்கத் தேவையில்லை. உண்மையாக முழு இருதயத்துடனும் நாம் அதை நாடினால், நிச்சயமாகவே தேவன் இவ்வனுபவத்தை நமக்குத் தருவார். ஏனென்றால் ஏசாயா, "காலைதோறும் என்னை எழுப்புகிறார்" என்று கூறி, நம்மை எழுப்பும் வேலை தேவனுடையது என்று நிரூபிக்கிறான் (ஏசாயா 50 : 4). இன்றும் கர்த்தர் உத்தம பரிசுத்தவான்களை எழுப்பி, இவ்வசனத்தில் கூறியிருப்பது போலவே அவர்களை

வழிநடத்திவருகிறார். இப்புத்தகத்தை ஆக்கியோனின் அனுதின அனுபவமும் இதுவேயாகும். ஆகவே, காலைதோறும் சுகந்த தூபங்காட்டி ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளத் தவறாதீர்!

(2) **மாலைதோறும்** : மேலும், "**மாலையில் விளக்கேற்றும் போதும்** அதின்மேல் தூபங்காட்டக்கடவன்" என்று நாம் வாசிக்கிறோம் (யாத். 30 : 7). இதில் இரண்டு காரியங்களை நாம் கவனிக்கிறோம்.

முதலாவதாக, **'மாலையில்'** தூபங்காட்ட வேண்டும் என்பதை நாம் ஆராய்வோம். தாவீது இதைக் குறித்து, "என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது" ("Lifting up of my hands as the evening sacrifice") என்று கூறுகிறான் (சங். 141 : 2). அப்போஸ்தலனாகிய பவுலும், கைகளை உயர்த்தி ஜெபம்பண்ண வேண்டும் என்கிறார் (I தீமோ. 2 : 8). இதையே, "உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்" என்று சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 134 : 2). எஸ்றா கர்த்தரை ஸ்தோத்திரித்தபோது ஜனங்கள் தங்கள் கைகளை உயர்த்தி (lift), "ஆமென் ஆமென்" என்று சொன்னது, அவர்களும் எஸ்றாவுடன் சேர்ந்து கர்த்தரை ஸ்தோத்திரித்ததற்கு அடையாளமாகும் (நெகே. 8 : 6). ஆகவே, கைகளை உயர்த்தி ஜெபம்பண்ணுவதென்பது கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரிப்பதுமாகும். "என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது" என்பது, கைகளை உயர்த்தி ஸ்தோத்திரபலி செலுத்துவதாகும். 'அந்தி' அல்லது சாயங்காலத்தில்தான் மனுஷன் பகல் முழுவதும் தேவன் தன்னைக் காத்ததையும், தனக்குச் செய்த நன்மைகளையும் சிந்தித்து, அவரை அதிகமாக ஸ்தோத்திரிக்கக் கூடியவனாயிருக்கிறான். இதுவே மாலையில் தூபங்காட்டுவதாகும். ஆகவே, நண்பரே! ஒவ்வொரு நாள் மாலையிலும் மறவாது கர்த்தர் செய்த நன்மைகளுக்காக உம் கைகளை உயர்த்திக் கர்த்தரை ஸ்தோத்திரிப்பீராக.

தேவமனுஷர் காலையில் மாத்திரமல்ல, மாலையிலும் ஜெபம்பண்ணுவதற்கான நேரங்களைக் குறித்து, தவறாமல் அவ்வேளைகளில் ஜெபம்பண்ணி வந்திருக்கிறார்கள். எஸ்றா, தானியேல் என்பவர்கள் இவ்விதம் ஒழுங்காக ஜெபம் பண்ணினதாலேயே (எஸ்றா 9 : 5 ; தானி. 9 : 21) கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்யக்கூடியவர்களாயிருந்தார்கள். அன்றியும் அப்போஸ்தலராகிய பேதுருவும் யோவானும் ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்தில் தேவாலயத்துக்குப் போனது (அப். 3 : 1), அந்திப்பலியைக் கனம்பண்ணினதாகும். ஆகவே, மாலை வேளைகளிலும் ஒழுங்காக ஜெபநேரத்தைக் குறித்துவைத்து ஜெபம்பண்ணுவது நமது ஜீவியத்தில் அதிக நன்மை பயக்கும்.

இரண்டாவதாக, மாலையில் **விளக்கேற்றும்போதும்"** அதின் மேல் தூபங்காட்டக்கடவன் என்பது கவனிக்கப் படத்தக்கது (யாத். 30 : 7). நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் பல மாலை (மந்தாரமான) நேரங்கள் அல்லது துக்கமான சமயங்கள் வருகின்றன. அவ்விதநேரங்களில் நம்மில் பலரும் வேத வசனத்தால் தேற்றப்பட்டிருக்கிறோம். தாவீதும், "உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்" என்கிறான் (சங். 119 : 92). "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது (வச. 105). ஆகவே, தீபம் அல்லது விளக்காகிய வேத வசனத்தை வாசிக்கும்போது ஜெபம்பண்ண வேண்டும். இதை உணர்ந்த தாவீது,

கர்த்தர் தமது பிரமாணங்களைத் தனக்குப் போதிக்க வேண்டும் என்று 119 - ஆம் சங்கீதத்தில் பலமுறை ஜெபம்பண்ணினதை நாம் காண்கிறோம் (வச. 12, 26, 33, 64 போன்றவை). "உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும்" (வச. 19), "உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும்" (வச. 28) — இவ்வித ஜெபத்தை இதே சங்கீதத்தில் பலமுறை அவன் செய்திருக்கிறான். அன்றியும், "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்" என்று இதே சங்கீதத்தின் 18 - ஆம் வசனத்தில் அவன் ஜெபம்பண்ணுவது, 'விளக்கேற்றும்போதும் தூபங்காட்ட வேண்டும்' என்னும் சத்தியத்தை அவன் எவ்வளவு உண்மையாய்க் கைக்கொண்டு வந்திருக்கிறான் என்பதை வெளிப்படுத்துகிறதன்றோ !

வேதவசனம் என்பது, சிலர் எண்ணுவதுபோல வெறும் எழுத்துக்கள் அல்ல, அவைகளில் 'அதிசயங்கள்' இருக்கின்றன. நம் மனக்கண்கள் திறக்கப்பட்டால் மட்டுமே அவ்வதிசயங்களை நாம் காணக்கூடும். "என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்" என்று கூறி, தேவன் தமது ஜனங்களைக் குறித்துத் துக்கப்படுகிறார் (ஓசியா 8 : 12). பெரிய மகத்துவங்கள் வேதாகமத்தில் இருக்கின்றன. அவற்றை அறியாது அதை மற்ற சாதாரண புத்தகங்களைப்போல எண்ணி, ஜெபம்பண்ணாமல் வாசித்தால், அவைகளை நாம் அந்நியகாரியமாக எண்ண நேரிடும். வேத வசனங்களில் இருக்கும் அதிசயங்களையும் மகத்துவங்களையும் நாம் பார்க்க வேண்டுமாயின் ஜெபம் தேவை. சிலர் இவ்விதம் ஜெபம்பண்ணாமல், கிறிஸ்தவ நூல் நிலையங்களிலுள்ள பற்பல புத்தகங்களை வாசித்து, எவ்வித வெளிப்படுத்தலுமின்றி மனுஷ ஞானத்தினால் வேதாகமத்தைக் குறித்துப் பேசித் தர்க்கங்களை உண்டுபண்ணி, பிரசங்கித்து, புத்தகங்களை எழுதி, அதிசயமும் மகத்துவமுமான வேதத்துக்குத் துரோகம் செய்கிறார்கள். தேவன் அவர்களுக்கு மன்னிப்பாராக. ஜெபமின்றி வேதாகமத்தை வாசித்துப் பலர் நாஸ்திகராகி விட்டனர். ஒருசிலர் வேதாகமம் முற்றிலும் தவறானதென்றும், அது கட்டுக்கதை என்றும் சொல்லத் துணிந்துள்ளனர். ஐயோ! என்ன பரிதாபம்! ஜெபத்துடனும் பரிசுத்தஆவியானவரின் உதவியுடனும் நாம் வேதாகமத்தை வாசித்தால், அதில் அங்குமிங்குமாய்ச் சிதறியிருக்கும் மறைவான மகத்துவங்கள் நமக்கு வெளியரங்கமாக்கப்பட்டு ஒன்றாகச் சேர்க்கப்படும். "அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்" (ஏசாயா 34 : 16). இவ்விதம் சேர்க்கப்படும் வசனங்கள், நமக்குப் புதிய வெளிப்படுத்தல்களைத் தந்து, நம்மைப் புதிய ஜீவியத்துக்குள் வழிநடத்தும்.

வேதாகமத்தை இவ்விதம் (தூபமிட்டு) வாசிப்போமேயானால், வேதமாகிய இந்த விளக்கு நம் பாதைக்கு வெளிச்சத்தைத் தந்து (சங். 119 : 105), நம்மை வழிவிலகாது காத்து, முடிவில் நமக்கு நித்திய ஜீவனைத் தரும். ஆகையால், தேவன் வேதாகமத்தைக் குறித்து, "இது உங்கள் ஜீவனாயிருக்கிறது" என்று கூறியிருக்கிறார் (உபா. 32 : 46,47). இதன் கருத்தை உணர்ந்த ஆங்கிலேயர் இதை 'பைபிள்' (Bible) என்று அழைத்தனர். அதாவது 'Behold I Bring Life Eternal' — 'இதோ, நான் நித்திய ஜீவனைக் கொண்டு வருகிறேன்' என்பது இதன் பொருளாகும். ஆம்! இது சத்தியமே! ஆகவே, ஜெபத்துடன் வேதாகமத்தை வாசித்து நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள ஜாக்கிரதையாயிருங்கள்.

இனி நாம் புதிய ஏற்பாட்டிலுள்ள சிலருடைய ஜெபங்களைக் குறித்து ஆராய்வது, நம் ஜெப ஜீவியத்தின் வளர்ச்சிக்கு அதிக உதவியாக இருக்கும்.

ௐௐௐௐௐௐௐௐ

அதிகாரம் 2

ஜெபத்தின் வளர்ச்சி

பாவிகளின் ஜெபம்

ஒருவன் பாவத்தில் நிலைத்திருந்து அதைக் குறித்து மனஸ்தாபமற்றவனாக இருந்தால் அவனுடைய ஜெபத்தைத் தேவன் அங்கிகரிப்பதில்லை. பாவக் கிரியைகள் செய்து பாவிகளாயிருப்பவர்களின் ஜெபத்தை மட்டுமல்ல, இருதயத்தில் அக்கிரம சிந்தையுள்ளவர்களின் ஜெபத்தையும் தேவன் கேளார். எனவேதான், "பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லை" (யோவான் 9 : 31) என்றும், "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" (சங். 66 : 18) என்றும் நாம் வாசிக்கிறோம். சிலர் தங்கள் இருதயத்தில் மற்றவர்களுக்கு விரோதமாகக் கசப்பு, பகை முதலியவைகளைச் சேகரித்து வைக்கிறார்கள்; சிலர் அசுத்த எண்ணங்களால் நிறைந்திருக்கிறார்கள். இவர்களுக்கும் தேவன் செவிகொடார். வேறுசிலர் வேதவசனங்களைக் கேட்கவுங்கூட விருப்பமற்றவர்களும் அவைகளுக்குக் கீழ்ப்படிய மனமற்றவர்களுமாயிருக்கிறார்கள். இவர்களுக்கும் கர்த்தர் செவிகொடுப்பதில்லை (நீதி. 28 : 9 ; சக. 7 : 12, 13). அன்றியும் மாயக்காரன் எவ்வளவாக விருத்தியடைந்தாலும், தேவன் அவன் கூப்பிடுதலைக் கேளார் என நாம் வாசிக்கிறோம் (யோபு 27 : 8, 9). இவ்விதமாகப் பாவங்களிலும் அக்கிரமங்களிலும் நிலைத்திருக்கிறவர்களுக்குக் கர்த்தர் செவிகொடாது தமது முகத்தை அவர்களுக்கு மறைக்கிறார் (ஏசாயா 59 : 1, 2). அவர்கள் ஜெபத்தைக் கர்த்தர் கேளாதவராயிருப்பது மட்டுமன்றி, அது அவர் பார்வையில் பாவமாகவும் அருவருப்பாகவும் இருக்கிறது (சங். 109 : 7 ; நீதி. 28 : 9). எனவே, இப்படிப்பட்டவர்கள் நொறுங்குண்ட இருதயத்துடன் தங்கள் பாவங்களைக் கர்த்தராகிய இயேசுவிடம் அறிக்கை செய்து அவற்றை விட்டுவிட வேண்டும் (II நாளா. 7 : 14 ; நீதி. 28 : 13).

பரிசேயனுடைய ஜெபம்

தேவன் பரிசேயனுடைய ஜெபத்தைக் கேட்கவில்லை என்று லூக்கா 18 : 11 - 14 - இல் நாம் காண்கிறோம். இவன், முந்தின குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவனைப்போல பாவத்தில் நிலைத்திருக்கிறவனல்ல. இவன் அநியாயம், விபசாரம் முதலிய பாவங்களைச் செய்யாதவனாயிருந்தது மாத்திரமல்ல, இக்காலத்தில் தேவனுடைய பிள்ளைகள் சிலரிடமுங்கூட காணப்படாத, வாரத்தில் இரண்டு முறை உபவாசித்தல், சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்துதல் முதலிய நற்கிரியைகளும் இவனிடத்தில் காணப்பட்டன. ஆயினும் இவனுடைய ஜெபம் கேட்கப்படவில்லை. காரணமென்ன? இவன் தன் ஜீவியத்திலுள்ள நீதியை நம்பி, மற்றவனை அற்பமாக எண்ணி, தசமபாகம் கொடுப்பதால் தன்னை உயர்த்தி, கர்த்தர் தன் ஜெபத்திற்குப் பதில் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்த்தான் (வச. 9 - 12). ஒரு மனுஷன் இருண்ட அறையில் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் சந்தோஷப்படலாம். ஆனால்

அம்மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தை சூரிய வெளிச்சத்தில் கொண்டுவந்தால், அது வெளிச்சமென எண்ணப்படமாட்டாது. இவ்விதமாகவே மனுஷனுடைய நீதி, நீதியின் சூரியனாகிய கர்த்தராகிய இயேசுவுக்கு முன்பாக இருக்கிறது. ஆனால் பரிசேயன் இதை அறியாதவனாயிருந்தான். ஆகவே, சுய நீதியையும் நற்கிரியைகளையும் நம்பி, சுயநீதியில் மேன்மைபாராட்டி ஏறெடுக்கும் ஜெபத்தைத் தேவன் கேட்பதில்லை என்பதை நாம் இதனால் அறிகிறோம்.

இக்காலத்திலும் தேவனுடைய பிள்ளைகளில் சிலர் இவ்வித சுயநீதியுடன் ஜெபம்பண்ணி, தங்கள் ஜெபங்களுக்குப் பதில் கிடைக்காதபடியால் சோர்ந்துபோகிறார்கள். உம்முடைய சோர்வுக்கு இது காரணமோ என்று ஆராய்ந்து, தானியேல் 9 : 18-இல் காண்பதுபோல, "நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்" என்று தாழ்மையுடன் அவர் தம் இரக்கங்களுக்காகக் கெஞ்சுவீராக.

ஆயக்காரனுடைய ஜெபம்

"ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று கர்த்தராகிய இயேசு கூறினார் (லூக்கா 18 : 13,14).

இவன் ஒரு பாவி, ஆனால், இவனுக்கு தேவசந்நிதானத்தைக் குறித்த பயமிருந்தபடியால் இவன் தேவாலயத்தின் பக்கத்தில் கூட வராது தூரத்திலே நின்றான். தன் பாவங்களைக் குறித்த உணர்வு இவனுக்குள் இருந்தபடியால், இவன் தன்னைத் தாழ்த்தி, "தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்." இவன் பாவியாக இருந்தபோதிலும் தன்னைத் தாழ்த்தினபடியால் தேவன் இவனது ஜெபத்தைக் கேட்டு, பாவியாக வந்த இவன், "நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்"போக உதவி செய்தார். ஆ! தேவன் எவ்வளவு நல்லவரும் சமீபமானவருமாயிருக்கிறார்!

இவ்விதம் நாம் தேவனைச் சமீபமாய்ப் பெற்றனுபவிக்க வேண்டுமாயின், நமக்கு நொறுங்குண்ட இருதயம் தேவை (சங். 34 : 18). ஒருவன் எவ்விதக்கொடும் பாவியாயிருந்தாலும் தன்னைத் தாழ்த்தி, தேவ பயத்தோடும் நொறுங்குண்ட இருதயத்தோடும் கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணினால், தேவன் அவனுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார். இதைக் குறித்து தாவீது, சங்கீதம் 145 : 18 - இல், "தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" என்கிறான். யோசியா ராஜா, தன் இருதயம் இளகி, தன்னைத் தாழ்த்தி விண்ணப்பம்பண்ணினபடியினால், கர்த்தர் அவனுக்குச் செவிகொடுத்து, அவன் சமாதானத்தோடே தன் கல்லறையில் சேர்க்கப்படுவான் என்று கூறி அவனை ஆறுதல்படுத்தினார் (II நாளா. 34 : 27,28). ஆகவே நம்முடைய ஜெபம் கேட்கப்படும் பொருட்டாக, நமது பாவங்களை ஒத்துக்கொண்டு தாழ்மையோடும் நொறுங்குண்ட இருதயத்தோடும் நாம் ஜெபம்பண்ண வேண்டியது அவசியம்.

மேற்கூறியவாறு நாம் ஜெபம்பண்ணி, ஜெபங்களுக்குப் பதில் கிடைக்க ஆரம்பித்த பின்பு, நாம் ஜெபஜீவியத்தில் பலவித வளர்ச்சியை அனுபவித்து, கர்த்தராகிய இயேசுவின் ஜெபத்தின் பூரண அனுபவத்திற்கு வந்து சேரவேண்டும். பின்வரும் சிலருடைய ஜெபங்களை நாம் ஆராயும்போது, படிப்படியாய் ஜெபஜீவியத்தின் வளர்ச்சியைக் குறித்து அறிந்து, ஜெபத்திலுள்ள குறைவுகள் நீக்கப்பட்டவர்களாக, முடிவில் கர்த்தராகிய இயேசுவின் பூரண ஜெபஜீவியத்தின் அனுபவத்திற்குக் கடந்து வரலாம்.

விதவையின் ஜெபம்

லூக்கா 18 : 1- 8- ஐ வாசிக்கும்போது, சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணும் பொருட்டு, கர்த்தராகிய இயேசு ஒரு உவமையைச் சொன்னதை நாம் காணலாம். இவ்வுவமையின் முற்பகுதியில் ஒரு விதவை நியாயாதிபதியிடத்தில் கேட்ட விண்ணப்பத்திற்குப் பதில் கிடையாமலிருந்ததாகவும், பின்பு பதில் கிடைத்ததாகவும் நாம் அறிகிறோம். நம் ஜீவியங்களிலும் அடிக்கடி ஜெபத்திற்கு உடனே பதில் கிடையாமல் இருப்பதைக் கண்டு நாம் சோர்ந்துபோகிறோம். ஆனால் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள இவ்விதவை சோர்ந்துபோகாமல் எப்போதும் நியாயாதிபதியை அலட்டிக்கொண்டிருந்தபடியால் அவளுக்குப் பதில் கிடைத்ததாக 5- ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறோம். கர்த்தராகிய இயேசு சொன்ன இவ்வுவமையில் ஒரு மனுஷன் இருந்தான் என்றோ அல்லது ஒரு ஸ்திரீ இருந்தாள் என்றோ சொல்லப்படாமல், ஒரு 'விதவை இருந்தாள்' என்று கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சாதாரணமாய் ஸ்திரீ பெலவீனமான பாண்டமாயிருப்பதால் அவள் தன் விவாகத்துக்கு முன் பெற்றோரையும், விவாகத்துக்குப் பின்பு புருஷனையும் சார்ந்திருக்கிறாள். விதவையாகும்போது இவ்விரண்டு சார்பிடங்களுமில்லாமல் அவள் தனிமையாக்கப்படுகிறபடியால் கர்த்தர்மேல் மாத்திரம் சார்ந்து, சோர்ந்துபோகாமல் ஜெபம்பண்ணக்கூடியவளாகிறாள் (I தீமோ. 5 : 5). ஆகையால்தான் கர்த்தர் இங்கு, 'ஒரு விதவை இருந்தாள்' என்று சொன்னார். தேவன் நம்முடைய சார்பிடங்களாகிய மனுஷ உதவி, பணம், சுகம், பெலன், கனம் முதலியவற்றை நீக்குவது நம்மேல் அன்பற்றபடியினாலல்ல, நாம் ஜெப ஜீவியத்தில் வளரும்பொருட்டாகவேயாகும். தேவன் உங்களை இவ்விதப் பாதையில் நடத்துவாராயின், சோர்ந்துபோகாமல் அதைப் பாக்கியமென்றெண்ணி, இந்த விதவையைப் போல் எப்போதும் அவரை அமர்ந்திருக்கவிடாமல் விடாப்பிடியாக ஜெபம்பண்ணி, ஜெபத்துக்குப் பதிலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

சாதாரணமாக, விதவைகள் தங்கள் கவலைகள், நிந்தைகள் இவற்றினிமித்தம் தங்களுக்காக மாத்திரம் ஜெபம்பண்ணுவது இயல்பு இதைக் கர்த்தர் உவமையாய்ச் சொன்ன விதவையின் விஷயத்தில் நாம் காண்பதுமன்றி, II இராஜாக்கள் 4 : 1 - 7 - இல் குறிப்பிடப்பட்டுள்ள விதவையிலும் காண்கிறோம். இதை நாம் குற்றமாக எண்ண முடியாது, ஆனால் ஜெபத்தின் வளர்ச்சியைக் குறித்துப் படிக்கும்போது தேவனுடைய பிள்ளைகள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்குத்தக்கதாக மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறார்கள்.

நாம் மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணக் கடன்பட்டிருக்கிறோம் (I தீமோ. 2 : 2). அப். பவுல்கூட,

தனக்காக ஜெபம்பண்ணும்படி சபையாரிடம் கேட்டுக்கொண்டது குறிப்பிடத்தக்கதாகும் (எபே. 6 : 18). சிலர் தங்களுக்காகவும், தங்கள் குடும்பத்தாருக்காகவும் மாத்திரம் ஜெபம்பண்ணுவார்களேயன்றி, மற்றவர்களைக் குறித்து ஜெபத்தில் சிறிதும் சிந்தையற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் மற்றவர்களிடம், தங்களுக்காக ஜெபம்பண்ணும்படி கேட்டுக்கொள்வார்கள். ஆனால் தாங்களோ மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணமாட்டார்கள். ஆகவே ஜெபஜீவியத்தில் வளர்ச்சி அவசியம்.

நீதிமான்களின் ஜெபம்

யாக்கோபு 5 : 16- இல், "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" என்று ஆவியானவர் எழுதி, முந்தின ஜெபத்தில் இருந்த குறையை நீதிமான்கள் மூலமாய் நிறைவாக்குவதை நாம் காண்கிறோம். அன்றியும் நீதிமானாகிய எலியா தீர்க்கதரிசி, மழை பெய்யாதபடிக்கு ஜெபம்பண்ணினான். அப்படியே மழை பெய்யவில்லை. பின்பு மழை பெய்யும்படியாக அவன் ஜெபம்பண்ணினபடியால், "வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது" என்று நாம் காண்கிறோம் (வச. 17, 18). இவ்விதம் ஒருவன் நீதிமானாக இருந்தால் மட்டுமே அவன் மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணக் கூடும். ஒருவனுடைய ஜீவியம் அநீதியுள்ளதாயிருந்து மற்றவர்களுக்காக ஜெபம்பண்ண ஆரம்பித்தாலும், அவன் 'கருத்தாய்' ஜெபம்பண்ணக் கூடாதவனாயிருப்பான்; அவன் ஜெபத்தால் யாதொரு நன்மையும் உண்டாகாது. ஆபிரகாம் நீதிமானாயிருந்து மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்தபோது அவனுடைய வேண்டுதலைக் கேட்டு, தேவன் அவர்களுக்கு இரக்கஞ்செய்தார் (ஆதி. 20 : 18). நீதிமானாயிருந்த யோபு மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்தபோது தேவன் அவனது சிறையிருப்பைத் திருப்பினார் (யோபு 42 : 8). மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணுவது மிக முக்கியமானதாயிருக்கிறபடியால், "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்" என்று சாமுவேல் சொல்கிறான் (I சாமு. 12 : 23). ஆகவே மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணக் கடன்பட்டிருக்கும் நீங்கள், எப்போதும் நீதிமான்களாக உங்களைக் காத்துக்கொள்ளத் தவறாதீர்கள்.

எலியா, யோபு போன்ற நீதிமான்கள் மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணியதின் பலனாக, மழை, சுகம் முதலிய நன்மைகள் அவர்களுக்கு உண்டாயின. இவ்வாசீர்வாதங்கள் பூமிக்குரியவையும் சரீரப்பிரகாரமான வையுமேயன்றி, ஆவிக்குரியவையல்ல. ஆனால் எபேசியர் 1 : 3 - இல், ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் என்று நாம் வாசிக்கிறோம். ஆகவே நீதிமான்கள் சிலருடைய ஜெபத்திலிருக்கும் முதலாவது குறையாகிய, லௌகீக, சரீர நன்மைகளுக்காக மாத்திரம் ஜெபம்பண்ணும் அனுபவத்திலிருந்து நாம் விடுதலை பெற வேண்டும். உங்கள் ஜெபத்தில் மிகுதியான நேரத்தை லௌகீக, சரீர காரியங்களுக்காகச் செலவு செய்கிறீர்களோ? அவ்விதமாயின் அது தவறாகும்.

அப். பவுல், "இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" என்று

சொல்லுகிறார் (I கொரி. 15 : 19). இவ்வித நிலையிலிருந்து விடுதலை பெற்று, கர்த்தராகிய இயேசு மத்தேயு 6 : 33 - இல் சொன்னது போல, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடி, அதினிமித்தம் இவைகளையெல்லாம்கூடப் பெற்றுக்கொள்வது என்ன பாக்கியம்!

நீதிமான்கள் தங்கள் ஜெபத்தால் பரலோகத்திலிருந்து ஆசீர்வாதங்களாகிய மழை, சுகம் முதலியவற்றை இறக்குகிறார்கள். ஒரு தேசம் முன்னேற்றமடைய இறக்குமதி செய்யப்பட்டால் மாத்திரம் போதாது; ஏற்றுமதியும் செய்யப்பட வேண்டும். அவ்விதமே ஒரு நீதிமான் தன் ஜீவியத்தில் சிறப்படைய பரலோகத்திலிருந்து நன்மைகளை இறக்குகிறவனாக மாத்திரமல்ல, பரலோகத்திற்குத் துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கிறவனாகவும் இருக்க வேண்டும். நீதிமான்களுடைய ஜெபத்தில் காணப்படும் இக்குறையையும் நீக்கி, நிறைவடைய கீழ்க்காணும் ஜெபத்தை நாம் ஆராய்வோமாக.

பரிசுத்தவான்களின் ஜெபம்

"அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய்" விழுந்தனர் (வெளி. 5 : 8). இங்கே, 'பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கம்' என்று நாம் காண்கிறோம். பரிசுத்தவான்களுடைய ஜெபம், தூபவர்க்கத்துக்கு ஒப்பனையாயிருக்கிறது. தூபவர்க்கத்தைத் தூபகலசத்தில் போட்டவுடன் தூபம் புகையாக மேலே செல்லுகின்றது. தூபவர்க்கமானது எவ்விதமாக எரிந்து இல்லாமற்போகிறதோ, அவ்விதமாகவே ஜெபத்தில் போராடுகிற பரிசுத்தவான்களும் இருக்கிறார்கள். அதற்கு ஒப்பனையாக அப். பவுல், "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது" என்று எழுதுகிறார் (II கொரி. 4 : 16). மேலும் அதைத் தொடர்ந்துள்ள வசனங்களில், தான் நித்தியமான, காணப்படாதவற்றை நோக்கியிருப்பதாகவும் அவர் கூறுகிறார். ஆகவே, காணப்படக்கூடிய, லௌகீக, சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களை அல்ல, அவர் காணப்படாத, நித்திய, ஆவிக்குரிய நன்மைகளையே எதிர்நோக்குகிறார். ஆகையினாலேயே அவர், "பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும்", "உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்பட" வேண்டுமென்றும் ஆவிக்குரிய காரியங்களுக்காக (ஆத்துமாவுக்காக) வேண்டுதல் செய்கிறதை நாம் காண்கிறோம் (எபே. 1 : 19 ; 3 : 16 - 19). இவ்விதம் பரிசுத்த வான்களுடைய ஜெபத்தில், நீதிமான்களுடைய ஜெபத்திலிருந்த முதலாம் குறை நீங்குகிறது. நிருபங்களில் கவனிக்கும்போது, அப். பவுலுடைய ஜெபங்கள் எல்லாம் ஆவிக்குரியவற்றிற்காகவே இருந்தனவேயன்றி, லௌகீகத்துக்குரியவற்றிற்காக இருக்கவில்லை என்பது விளங்குகிறது. அப்படியிருந்தும் சரீரப்பிரகாரமாயும், "எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது" என்று அவர் எழுதுகிறதை நாம் காண்கிறோம் (பிலி. 4 : 18).

பிரியமானவர்களே, உங்கள் ஜெபத்தின் மிகுதியான பாகமும் ஆவிக்குரிய காரியங்களுக்காக விண்ணப்பம் பண்ணுவதாய் இருப்பதாக. அப்படிச் செய்வீர்களானால் மத்தேயு 6 : 33 - இன்படியே தேவன் உங்களுக்குச் செய்ய உண்மையுள்ளவராக இருக்கிறார்.

இவ்விதமான 'பரிசுத்தவான்களின் ஜெபத்தை' ஏறெடுப்பது எவ்வளவு பாக்கியம்!

பரிசுத்தவான்களின் ஜெபத்திற்கு ஒப்பனையான தூபவர்க்கம் எரிந்து இல்லாமற்போகிறதும் கவனிக்கப் படத்தக்கதாகும். அப். பவுலுடைய ஜெபத்தைக் கவனிக்கும்போது அவர் தனக்காக அல்ல, பெரும்பாலும் மற்றவர்களுக்காகவே ஜெபம்பண்ணியிருக்கிறார். அன்றியும் பரிசுத்தவானாகிய ஸ்தேவான், "ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்று சொல்லி, தூபவர்க்கம் எரிந்து இல்லாமற் போவதுபோல், மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணி, பின் மரித்தார். இவ்விதம் பரிசுத்தவான்களின் ஜெபத்தை ஏறெடுக்க நாம் பழகிக்கொள்ள தேவன் நமக்கு உதவி செய்வாராக.

தூபகலசத்திலிருந்து வெளிவரும் தூபமானது வானத்தை நோக்கி மேலே செல்லுகின்றது (வெளி. 8 : 3,4). இதுவே பரிசுத்தவான்கள் பரலோகத்துக்கு அனுப்பும் ஏற்றுமதியாகும்.

பரிசுத்தவான்களுடைய ஜெபத்தில் மிகுதியான ஸ்தோத்திரங்கள் நிறைந்திருப்பது கவனிக்கப்படத் தக்கதாகும். அப். பவுல், "உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்" (I தெச. 1 : 4) என்றும், "சகோதரரே, ... நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (II தெச. 2 : 13) என்றும் எழுதி, ஸ்தோத்திரமாகிய தூபத்தை மேலே செலுத்த வேண்டியது 'கடன்' என்று வெளிப்படுத்துகிறார். இவ்விதமாகப் பரிசுத்தத்தில் வளர்ந்துவரும் ஒரு பரிசுத்தவானுடைய ஜெபத்தில், நீதிமான்களுடைய ஜெபத்தின் இரண்டாவது குறையாகக் காணப்பட்ட, (ஏற்றுமதியாகிய) ஸ்தோத்திரம் பண்ணுவதிலுள்ள குறைவை நிறைவாக்குவது அவசியமாகும்.

ஆனால் பலர் ஜெபத்தில் ஸ்தோத்திரத்தைக் குறைத்து, தேவனை நோக்கி அதிகமாய் முறையிட்டு ஜெபத்தின் வல்லமையையும் தேவ சந்நிதானத்தின் பேரின்பத்தையும் அனுபவியாது ஜெபத்திலிருந்து எழும்புவது, எவ்வளவு வேதனைக்குரியது! தானியேல் சத்துருக்களால் சூழப்பட்டிருந்தபோதிலும், தன் ஜெபத்தை ஸ்தோத்திரத்துடன் முடித்தான். இதைக் கண்ட பரலோகம் மகிழ்ந்து அவனை விடுவிக்கத் தேவதூதனைச் சிங்கக்கெபிக்கு அனுப்பிற்று (தானி. 6 : 10 - 22). சிறைச்சாலையில் கட்டப்பட்டவர்களாயிருந்த பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணுவதோடு நிறுத்திவிடாமல், "தேவனைத் துதித்துப் பாடினார்கள்" (அப். 16 : 25). இச்சந்தர்ப்பத்தில் அவர்கள் தங்கள் வஸ்திரங்கள் கிழிக்கப்பட்டவர்களாகவும், அநேக அடிகளால் வேதனைப்படுத்தப்பட்டவர்களாகவும், தங்கள் கால்கள் தொழுமரத்தில் மாட்டப்பட்டவர்களாகவும் உட்காவலறையிலே இருந்தார்கள் (அப். 16 : 22 - 24). இக்கொடிய வேதனைகளின் மத்தியில் ஜெபத்தின் ஒழுங்கைக் கடைபிடித்து அவர்கள் துதித்தது மாத்திரமல்ல, பாடவும் செய்தார்கள். ஆகவே ஜெபத்தைக் கேட்கும் கர்த்தர், உடனே அவர்களுக்கு அதிசய விடுதலை அளித்ததுமின்றி, அவர்களது ஆத்தும தாகத்தைத் தீர்க்க, சிறைச்சாலைக்காரனுடைய குடும்பத்தையும் இரட்சித்தார். ஜெபத்தோடு கூடிய ஸ்தோத்திரம் எவ்வளவு வல்லமையுள்ளது! உங்கள் குடும்பங்களிலும் உத்தியோகங்களிலும் உள்ள தொந்தரவுகளுக்காக நீங்கள் ஜெபம் மாத்திரம் செய்து, ஸ்தோத்திரம் பண்ணாமல் விட்டுவிடுவதாலேயே இன்னும் நீங்கள் அவற்றினின்று விடுதலை பெறாமல் கலக்கமுற்றிருக்கிறீர்கள். பவுலையும் சீலாவையும் போல ஜெபத்துடன் சேர்த்து துதிக்கவும் பாடவும் ஆரம்பிப்பீர்களாகில், பட்சபாதமில்லாத தேவன்

உங்களுக்கும் நிச்சயமாகவே அதிசீக்கிரத்தில் அதிசய விடுதலையை அளிப்பார்.

துதியும் ஸ்தோத்திரமும் ஒன்றுபோல் காணப்பட்டாலும் சத்திய வேதாகமத்தை ஆராயும்போது அவற்றுக்கிடையே சிறிது வித்தியாசம் இருப்பதை நாம் அறிகிறோம். தாவீது, "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" என்று எழுதுகிறான் (சங். 103 : 2). ஆனால் 148- ஆம் சங்கீதத்தில் அவன் சிருஷ்டிகளை அழைத்து, "அவரைத் துதியுங்கள்; ... அவரைத் துதியுங்கள்" என்று சொல்லுகிறான். கடைசியாக அவன் அச்சங்கீதத்தில், "அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்; அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது" என்கிறான் (வச. 13). இதை நுட்பமாக ஆராயும் போது, கர்த்தரைத் துதிப்பதென்று சொல்வது, அவருடைய மகிமையையும் வல்லமையையும் சிந்தித்து அவரைப் புகழ்ந்து (praise) கொண்டாடுவதாகும் என நாம் அறிகிறோம். ஆனால் ஸ்தோத்திரம் என்பது அப்படிப் புகழ்ந்து கொண்டாடுவதல்ல. 103 - ஆம் சங்கீதத்தில் சொல்லப்பட்டிருப்பது போல, "அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து" - உன் ஆத்துமாவிற்குச் செய்த நன்மைகளையும், "உன் நோய்களையெல்லாம் குணமாக்கி" - உன் சரீரத்திற்குச் செய்த நன்மைகளையும், "உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு" - உன் ஆவிக்குச் செய்த நன்மைகளையும், மறவாது நன்றி செலுத்துவது (thanksgiving) ஆகும் (வச. 3,4).

மேலும், "தாவீதும் ஆசாப்பும் இருந்த பூர்வநாட்களில் ... தேவனுக்குத் துதியும் தோத்திரங்களும் செலுத்துகிற சங்கீதங்கள் திட்டம்பண்ணப்பட்டிருந்தது" (நெகே. 12 : 46). ஸ்தோத்திரம்பண்ணி, துதிப்பதால் கிருபையை அதிகமாகப் பெற்றுக்கொள்ளவும் (II கொரி. 4 : 15), தேவனைப் பிரியப்படுத்தவும் (சங். 69 : 30, 31) கூடும். ஆகவே ஒரு தேவனுடைய பிள்ளையின் ஜீவியத்தில் இவ்விரண்டும் இன்றியமையாதனவாகும்.

ஸ்தோத்திரமாகிய தூபத்தைத் தேவனுக்குச் செலுத்துவது மாத்திரமல்ல, தன்னையும் தன்னோடுள்ள பரிசுத்தவான்களையும் தேவனுக்கு முன் நிறுத்த வேண்டுமென்ற வாஞ்சை அப். பவுலுக்கு இருந்தது. கிறிஸ்துவின் இரகசிய வருகையில், பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் அவருடனேகூட இருப்பார்கள் (I தெச. 4 : 17). இந்தத் தேவ நோக்கத்தை அறிந்த அப். பவுல் சபையைத் தேவஒழுங்கின்படி தேவ சந்நிதானத்தில் அவருக்கு முன் நிறுத்தும் பொருட்டாக (எபே. 5 : 27), சபையார், "கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்" என்று கூறுகிறார் (பிலி. 1 : 11). இவ்விதமாய், பரிசுத்தவான்களுடைய ஜெபத்தில், தேவனிடமிருந்து வாங்கவேண்டுமென்ற எண்ணத்தைப் பார்க்கிலும் தேவனுக்குக் கொடுக்க வேண்டுமென்ற சிந்தையே அதிகமாயிருக்கிறது. ஆம்! "வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" (அப். 20 : 35). உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறாரே! (II கொரி. 9 : 7).

கர்த்தராகிய இயேசுவின் ஜெபம்

ரோமர் 8 : 34 - இல் கர்த்தராகிய இயேசு தேவனுடைய வலதுபாரிசத்திலிருந்து நமக்காக

வேண்டுதல் செய்கிறார் என்று நாம் வாசிக்கிறோம். தேவனுடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமுண்டு (சங். 16 : 11). கர்த்தராகிய இயேசு இந்த நித்திய பேரின்பத்தின் மத்தியில் இருப்பினும், தீமை நிறைந்த இவ்வுலகத்திலிருக்கும் பெலவீனராகிய நம்மைக் காக்கும்பொருட்டு தீமையைப் பார்க்கக்கூடாத சுத்தக்கண்ணராயிருக்கிற அவருடைய கண் நம்மேல் நோக்கமாயிருக்கிறது (சங். 33 : 19). இவ்விதமாய் அவர் நம் பெலவீனங்களைப் பார்த்து நாம் அழிந்து போகாமலிருக்கும்படி நமக்காகப் பரிந்து பேசுகிறபடியினாலேயே நாம் இம்மட்டும் நிலைநிற்கிறோம்.

கன்வென்ஷன்கள், எழுப்புதல் கூட்டங்கள் முதலிய ஆவிக்குரிய சந்தோஷ சந்தர்ப்பங்களில் பரிசுத்தவான்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது, சந்தோஷங்களிலும் சம்பாஷணைகளிலும் மூழ்கித் தங்கள் ஜெப ஜீவியத்தில் குறைவுபடுவது இயல்பு. ஆனால் பரலோகத்தில் எப்போதும் பேரானந்தத்தின் மத்தியிலிருக்கும் கர்த்தராகிய இயேசு, பாவ உலகத்திற்காகப் பரிந்து பேசுவது நம் சிந்தைக்கு எட்டாத ஆச்சரியமன்றோ? அவரைப் போல பூரணசற்குணராயிருக்கவும், அவருடைய நிறைவான வளர்ச்சியை அடையவும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய நாம், சந்தோஷமான சந்தர்ப்பங்களிலும், ஆத்தும பாரத்தால் நிறைந்து, கர்த்தராகிய இயேசுவைப்போல் மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணி, ஜெபஜீவியத்தில் பூரண வளர்ச்சி அடைய வேண்டியது மிக அவசியம். தேவன் அதற்கு உதவி செய்வாராக.

இம்மட்டும் நாம் ஜெபத்தைக் குறித்துப் பொதுவாக ஆராய்ந்தோம். இனி நாம் எவ்விதம் ஜெபம்பண்ண வேண்டுமென்பதை ஆராய்வது அவசியமாகும்.

ஈஈஈஈஈஈஈஈ

அதிகாரம் 3

எவ்விதம் ஜெபம்பண்ண வேண்டும்?

சோர்ந்துபோகாமல் ஜெபம்பண்ண வேண்டும்

ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஜெபம் பிரதானமானது என்பதைப் பிசாசானவனும் அறிந்திருக்கிறபடியால், தேவனுடைய பிள்ளைகள் ஏதாகிலும் ஒரு காரியத்திற்காக சில நாட்கள் ஜெபம்பண்ணி, அதற்கு உடனே பதில் பெற்றுக்கொள்ளாமலிருக்கும்போது, அவன் அவர்கள் இருதயங்களில் சோர்வை அனுப்புகிறான். சிலர் இப்படிப்பட்ட சோர்வுக்கு இடங்கொடுத்து, ஜெபம்பண்ணிவந்த விஷயத்திற்காகத் தொடர்ந்து ஜெபம்பண்ணாமல் விட்டுவிடுவதும், வேறு சிலர், ‘ஜெபம்பண்ணிதான் என்ன கண்டோம்’ என்று சொல்வதும், மற்றும் சிலர், ‘ஜெபம்பண்ணினாலும் ஜெபம்பண்ணாவிட்டாலும் நடப்பது நடந்தே தீரும்’ என்ற எண்ணத்தினால் ஜெபத்தை விட்டுவிடுவதும் இயல்பு. இவ்விதச் சோர்வானது பிசாசின் ஒரு வல்ல ஆயுதம் என்பதை மறக்க வேண்டாம். இவ்விதச் சோர்விலிருந்து விடுதலை பெற்றுக்கொள்வது எப்படி?

கர்த்தராகிய இயேசு, சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணுவதைக் குறித்துச் சொன்ன உவமையில் அவர் குறிப்பிட்டுள்ள விதவைக்கு உடன்

பதில் கிடைக்காமலிருந்தபோதிலும், அவள் சோர்ந்துபோகாது அலட்டிக் கொண்டிருந்ததை நாம் காண்கிறோம் (லூக்கா 18 : 1 - 7). ஒரு விதவை, தன் முதலாவது சார்பிடமாகிய பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டு, இரண்டாவது சார்பிடமாகிய தன் புருஷனையும் இழந்து, இனி அவளுக்குக் கிறிஸ்து மாத்திரமே சார்பிடமாயிருக்கிறபடியால் சோர்ந்துபோகாமல் ஜெபம்பண்ணக் கூடியவளாயிருக்கிறாள். ஒருவனுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட நம்பிக்கைக்குரிய இடங்கள் இருக்கும்போது, அவன் ஒன்றை மாத்திரம் சார்ந்து பற்றிப் பிடித்துக்கொள்ளக் கூடாதவனாயிருப்பான். விதவைக்கோ கர்த்தர் ஒருவரே நம்புதற்குரியவர். ஆகையாலேயே, 'விதவைகளுடைய தேவன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. விதவையானவள் நிந்தையடைந்தவளும், கைவிடப்பட்டு மனம் நொந்தவளுமான ஸ்திரீயாயிருக்கிறாள் (ஏசாயா 54 : 4 - 6). இவ்விதம் கைவிடப்பட்ட ஒரு விதவை, தேவன் மாத்திரம் தனக்குத் தஞ்சம் என்று எண்ணி, சோர்ந்து போகாமல் எப்போதும் ஜெபம்பண்ணக் கூடியவளாக இருக்கிறாள். ஆகையால் நாமும் சோர்ந்துபோகாமல் எப்போதும் ஜெபம்பண்ணும்படியாக, நம் அருமையானவர்களால் நாம் கைவிடப்படுவதற்கும், பல காரணங்களினால் மனவேதனையடைவதற்கும், நிந்தைகளடைவதற்கும் தேவன் இடங்கொடுத்து, விதவையைப் போன்ற அனுபவத்துக்கு நம்மை அடிக்கடி வழிநடத்துகிறார். அப். பவுல் இடைவிடாத மனவேதனை உள்ளவராயிருந்தார் (ரோமர் 9 : 1). ஆகையால் அவர் ஜெப ஜீவியத்தில் சோர்ந்துபோகவில்லை. அன்றியும் II இராஜாக்கள் 4 - ஆம் அதிகாரத்தில் காணப்படும் விதவையின் கடன், அற்புதமாய் ஒரே நாளில் தேவ வல்லமையால் தீர்க்கப்பட்டதற்குக் காரணம், அவள் விதவையாய் இருந்ததுடன், அவளது இரண்டு குமாரரும் அடிமைகளாகும் நிலையிலிருந்ததினால், அவள் தேவனை மாத்திரம் நோக்கிப் பார்க்க வேண்டியவளாயிருந்ததேயாகும். இவ்விதம் வேறு சார்பிடங்கள் இல்லாதிருக்கும்போது நாம் சோர்ந்துபோகாமல் எப்போதும் ஜெபம்பண்ணக் கூடும்.

சிலர் தங்களுக்கு அருமையானவர்களுடைய இரட்சிப்புக்காக சிலகாலம் ஜெபம்பண்ணி, அவர்கள் இரட்சிப்படையாதபடியால் சோர்ந்துபோய், ஜெபம்பண்ணுவதை விட்டுவிடுகிறார்கள். ஆனால் ஜார்ஜ் முல்லர் என்பவர் தன் இரண்டு நண்பர்களின் இரட்சிப்புக்காக ஐம்பத்து மூன்று வருடங்கள் சோர்ந்துபோகாமல் தொடர்ந்து ஜெபம்பண்ணினார். பின்னர் அவர் மரணப்படுக்கையிலிருந்தபோது, அவர்களில் ஒருவன் இரட்சிக்கப்பட்டான் என்னும் செய்தியைக் கேள்விப்பட்டுத் தன் கண்களை மூடினார். ஐம்பத்து மூன்று வருடங்கள் சோர்ந்து போகாமல் ஜெபம்பண்ணின அவரது ஜெபத்தைத் தேவன் கனம்பண்ணினார். இன்னும் ஆறுமாதங்கள் சென்ற பின்பு, மற்ற நண்பனையும் தேவன் இரட்சித்து, தாம் ஜெபத்துக்குப் பதில் அளிக்கிறவர் என்பதை நமக்கு நிரூபித்திருக்கிறார். சகோதரனே! நீர் ஆரம்ப காலத்தில் அநேகருக்காக ஜெபம்பண்ணி, இப்போது அவர்களில் பலருக்காக ஜெபம்பண்ணுவதை விட்டுவிட்டீரல்லவா? நீர் சோர்ந்துபோகாமல், மறுபடியும் உம்முடைய ஜெப ஜீவியத்தைப் புதுப்பிப்பீரேயாகில், "சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார்" என்று லூக்கா 18 : 8 - இல் கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தை நிறைவேறும். "சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார்" என்பதால் ஜெபம்பண்ணியவுடன் பதிலளிப்பார் என்பதல்ல, அதற்கு முந்தின வசனத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து நியாயம் செய்வார் என்று நாம் காண்கிறோம். அதாவது, ஒரு பக்கத்தில்,

தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருப்பார். மறுபக்கத்தில், அவர் சீக்கிரத்திலும் நியாயஞ்செய்வார். தேவன் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கும்போது மனுஷர் சோர்ந்துபோகிறார்கள். ஜெபம்பண்ணியவுடன் பதில் கிடைக்காவிட்டாலும், அவருடைய நீடிய பொறுமையுடன் சேர்ந்து நாமும் நீடிய பொறுமையுள்ளவர்களாயிருக்க வேண்டும். யோசேப்புக்குத் தேவன் காண்பித்த சொப்பனங்கள் உடனே நிறைவேறாது, காரியங்கள் அதற்கு மாறாக சம்பவித்து, நம்பிக்கையற்ற நிலையில் இருந்த வேளையிலும் அவன் சோர்ந்துபோகாது நீடிய பொறுமையுள்ளவனாயிருந்தான். ஆகையாலேயே, இராஜா கண்ட சொப்பனங்களின் அர்த்தம் அவனிடம் கேட்கப்பட்டவுடனே அவன் அதைச் சொல்லக்கூடியவனாயிருந்தான். இவ்விதம் நீடிய பொறுமையுள்ளவனாயிருந்த யோசேப்புக்குத் தேவன் “சீக்கிரத்திலே” பதிலளித்தார். அது எவ்விதம்?

யோசேப்பின் வஸ்திரம் அந்த ஸ்திரீயிடம் இருந்தபடியால், அவன் தன் நியாயத்தை மனுஷ ஒழுங்கின்படி ஒருபோதும் நிரூபிக்க முடியாது. அது நீதிமன்றத்தில் தொடர்ந்து நீண்ட காலம் விசாரிக்கப்பட வேண்டும். அதுவும் சீக்கிரம், எளிதில் நிரூபிக்கப்படக்கூடிய ஒன்று அல்ல. ஆனால் தேவன் நியாயஞ்செய்யத் தீர்மானித்தபோது, அதாவது தேவனுடைய குறித்த வேளை வந்தபோது, ஒரே நாளில், சிறிது நேரத்துக்குள் “சீக்கிரத்திலே” அவன் சிறைச்சாலையிலிருந்து நேரடியாக பார்வோனுக்கு அடுத்தவனாக உயர்த்தப்பட்டான். ஆ! என்ன ஆச்சரியம்! இவ்விதம் தேவன் உங்களுடைய விஷயத்திலும் நீடிய பொறுமையுள்ளவராக இருந்தாலும் சீக்கிரத்தில் நியாயஞ்செய்வார். ஆகவே, சோர்ந்துபோகாது, நீடியபொறுமையுடன், அவருடைய வேளைக்காகக் காத்திருந்து ஜெபம்பண்ணிக்கொண்டேயிருங்கள்.

எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும்

லூக்கா 18 : 1- இல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும் என்றும் கர்த்தராகிய இயேசு கூறியிருக்கிறார். இதை உறுதியாக்கவே, “இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்” என்று அப். பவுல் எழுதுகிறார் (I தெச. 5 : 17). எப்பொழுதும் ஜெபம்பண்ணக்கூடுமோ என்பது பல தேவபிள்ளைகளுக்குள்ளும் எழும்பும் ஒரு கேள்வியாகும்.

“இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்” என்று சொன்ன அப். பவுல், தான் அவ்விதமாகச் செய்துகொண்டி ருந்ததைக் காண்பிக்கும் பொருட்டாக, “நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து, … எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்” என்று கூறுகிறார் (I தெச. 1 : 2- 4). அப். பவுல் இவ்விதம் செய்தார் என்று சொல்லும்போது, அவருக்கு உலகப் பிரகாரமான வேலைகள் இல்லாமல் அவர் தேவஊழியம் மாத்திரம் செய்தபடியால் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்து அவ்விதம் ஜெபம்பண்ணியிருந்திருக்கக் கூடுமென்றும், உலகத்தில் பல வேலைகளும் உத்தரவாதங்களுமுள்ள நமக்கு ஓரிடத்தில் உட்கார்ந்து எப்போதும் ஜெபம்பண்ணக் கூடுமோ என்றும் ஒருசிலர் யோசிக்கலாம். ஆனால் அப். பவுல் தன் சரீரபெலவீனத்தின் மத்தியிலும் கர்த்தருடைய ஊழியத்தில் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவர்; அதிகமாகப் பிரயாணம் செய்தவர்; அநேக சபைகளுக்குப் பொறுப்பாயிருந்து, அவர்களைப் பற்றிக் கவலையுள்ளவராய் அவர்களுக்கு நிருபங்களை

எழுதி, கண் விழிப்புடன் அவர்களுக்காக இரவும் பகலும் பாடுபட்டவர் என்பதை மறவாதீர்.

தானியேல் தினமும் மூன்று வேளையும் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி தேவனை ஸ்தோத்திரித்தான் (தானி. 6 : 10). அப்பொழுது அவன் தரியு ராஜாவின் விசாலமான ராஜ்யம் முழுவதின் ஆளுகையையும் நடத்திய மூன்று பிரதானிகளில் ஒருவனாயிருந்தது மாத்திரமல்ல, அந்தப் பிரதானிகளுக்கு மேற்பட்டவனாயுமிருந்தான் (வச. 1-3). அப்போது அவனுக்கு இருந்த உத்தரவாதங்களும் திரளான வேலைகளும் இப்போது நம் ஒருவருக்கும் இல்லை என்பது நிச்சயமே. இப்பெரும் உத்தரவாதங்களின் மத்தியிலும் தானியேல் இடைவிடாமல் தேவனை ஆராதித்ததாக (ஜெபித்ததாக) தானியேலோடு நெருங்கிப் பழகிக்கொண்டிருந்த இராஜா சாட்சி கொடுத்ததாக நாம் பார்க்கிறோம்(வச. 16). ஆகவே இடைவிடாமல் ஜெபம்பண்ணுவது என்பது முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணுவது மட்டுமல்ல, எப்போதும் ஜெப சிந்தையோடிருப்பதும் ஆகும்.

ஒருமுறை வேதாகமக் கல்லூரியில் கற்ற சில பெரியவர்கள் ஒரு வீட்டில் சந்தித்தபோது, கர்த்தராகிய இயேசு சொன்னதுபோல் எப்போதும் ஜெபம்பண்ணக் கூடுமா என்பதைக் குறித்து சம்பாஷித்து, இறுதியில் அது கூடாத காரியம் என்று முடிவு செய்தார்கள். பல வேலைகளின் மத்தியிலும் அதைக் கவனித்துக்கொண்டிருந்த அவ்வீட்டு வேலைக்காரி இவர்கள் சம்பாஷணையின் முடிவைக் கேட்டு துக்கத்தோடு முன்வந்து, கர்த்தராகிய இயேசு சொன்னது சத்தியம் என்றும், நிச்சயமாய் எப்போதும் ஜெபம்பண்ணக் கூடும் என்றும் கூறினாள். இதைக் கேட்ட அவர்கள் மிகவும் வியப்படைந்து அவளை அதட்டி, ‘அது எவ்விதம் கூடும்?’ என்று கேட்டார்கள். அவளோ தான் எப்போதும் ஜெபம் பண்ணுவதாகச் சொல்லவே, அவர்கள் ஆச்சரியங்கொண்டு, அவள் எப்போதும் ஜெபம்பண்ணுவதை அல்ல, எப்போதும் வேலை செய்வதையே தாங்கள் பார்த்திருப்பதாகச் சொன்னார்கள். அவளோ தான் வீட்டைச் சுத்தஞ்செய்யும்போது, ‘ஆண்டவரே! என் இருதயத்தின் அசுத்தங்களையெல்லாம் இப்படியே நீக்கும்’ என்றும், அடுப்பண்டை நிற்கும்போது, ‘ஆண்டவரே! என்னை அனலுள்ளவளாக்கும்’ என்றும், மற்றவர்களுக்குப் போஜனம் கொடுக்கும்போது, ‘ஆண்டவரே! மற்றவர்களுக்கு ஆத்தும ஆகாரம் கொடுக்க உதவி செய்யும்’ என்றும், இவ்விதமாகவே ஒவ்வொரு வேலை செய்யும்போதும், எப்போதும் ஜெபம்பண்ணுவதாகச் சொல்லி, எப்போதும் ஜெபம்பண்ணக் கூடும் என்பதை உறுதிப்படுத்தினாள். ஆம்! அது எவ்வளவு சத்தியம்!

இவ்வித ஜெபம், ‘ஜெபத்தியானம்’ (யோபு 15 : 4) என அழைக்கப்படுகிறது. ஆகவே இடைவிடாமல் ஜெபம்பண்ணுவது, எப்போதும் ஓரிடத்தில் உட்கார்ந்து, அல்லது முழங்காலில் நின்று ஜெபம்பண்ணுவது என்று எண்ணி, அது முடியாத காரியம் என்று யோசித்து வஞ்சிக்கப்படாதிருங்கள். உங்களுக்கு அருமையான ஒரு பிள்ளை கொடிய வியாதியால் பாடுபடும்போது நீங்கள் கடைக்குப் போக நேரிட்டால் அங்கு சாமான்கள் வாங்கும்போதும், இன ஜனத்தாரைச் சந்திக்க நேரிட்டால் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போதும், உங்கள் சிந்தை அந்தப் பிள்ளையின் மேலேயே இருக்குமல்லவா? இதைப் போலவே, எப்போதும் ஜெப சிந்தையுடன் மனதில் தேவனோடு உறவாடிக் கொண்டிருப்பதே ‘ஜெபத்தியானம்’ என்றும், இடைவிடாமல் ஜெபம்பண்ணுவது என்றும் கூறப்படுகிறது. அன்றியும், பட்டாளத்திலே நூற்றுக்கதிபதியாக இருந்த கொர்நேலியு “எப்பொழுதும்

தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான்" (அப். 10 : 2) என்பது இச்சத்தியத்தை உறுதியாக்குவதுடன், நாமும் இவ்விதம் ஜெபம்பண்ணக்கூடும் என்னும் விசுவாசத்தையும் நம்மில் உருவாக்குகிறதன்றோ!

இவ்விதம் எப்பொழுதும், இடைவிடாமல் ஜெபம்பண்ணிக் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட முடியும் (லூக்கா 21 : 36). ஆகவே, நாம் கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட விரும்புவோமானால், கர்த்தரிடத்தில் போராடி எப்படியாகிலும் இவ்வனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ண வேண்டும்

அப்போஸ்தலனாகிய யூதா தன் நிருபத்தில் பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ண வேண்டுமென்று தேவனுடைய ஜனங்களுக்குப் புத்தி சொல்லுகிறார் (வச. 20). அப்போஸ்தலனாகிய பவுல், "நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்" என்று எழுதுகிறார் (ரோமர் 8 : 26). அவர் ஒவ்வொரு சபைக்காகவும் எவ்விதம் ஜெபம்பண்ண வேண்டுமென்று அறியாதிருந்தமையால், ஆவியானவர்தாமே அந்தந்த சபையின் நிலைமைக்கேற்றபடி அவரை ஜெபம்பண்ணச் செய்தார். உதாரணமாக,. ஆவியில் ஆரம்பித்து மாம்சத்தில் முடித்த கலாத்திய சபையாருக்காக அவர் கர்ப்ப வேதனைப்பட்டு ஜெபம்பண்ணினார் (கலா. 4 : 19). சுவிசேஷத்திற்கு உடன்பட்ட பிலிப்பிய சபையாருக்காக அவர் எப்பொழுதும் சந்தோஷத்தோடு விண்ணப்பம் செய்திருக்கிறார் (பிலி. 1 : 3,4). கர்த்தருடைய வருகைக்காகக் காத்திருந்த தெசலோனிக்கேய சபையாருக்காக அவர் ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறார் (I தெச. 1 : 4 ; II தெச. 1 : 3). இவ்விதமாக அவர் பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணப் பழக்கப்பட்டார்.

மேலும் அப். பவுல், "நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்" என்கிறார் (I கொரி. 14 : 15). ஆகவே ஒரு தேவனுடையபிள்ளை இரண்டு விதமாக ஜெபம்பண்ணக்கூடும். தான் அறிந்திருக்கிற ஒரு காரியத்திற்காக ஜெபம்பண்ணுவது கருத்தோடு ஜெபம் பண்ணுதலாகும். ஆனால், ஆவியோடு ஜெபம்பண்ணுவதென்றால், ரோமர் 8 : 26 - இன்படி, முன்பு தனக்குத் தெரிந்திராத அல்லது தான் யோசித்திராத காரியத்திற்காக ஜெபம்பண்ணுவதாகும். ஜெபஜீவியத்தில் வளர்ந்திருக்கிற பரிசுத்தவான்கள் இவ்வனுபவத்தால் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகுந்த பலனை உண்டாக்குகிறார்கள்.

ஒருவர் ஏதாகிலும் ஒரு வேலை செய்துகொண்டிருக்கும்போதோ அல்லது நித்திரையிலிருந்து திடீரென விழிக்கும்போதோ தான் யோசித்திராத ஒரு நபருக்காகவோ, ஒரு விஷயத்துக்காகவோ ஜெபம்பண்ண ஏவப்படுகிறார். அவ்வித ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து ஜெபம்பண்ணுவது ஆவியில் ஜெபம்பண்ணுவதின் ஒரு பகுதியாகும். உதாரணமாக, சில வருடங்களுக்கு முன்பு இலங்கையிலிருந்த ஒரு தேவபிள்ளையைத் தேவன் அதிகாலையில் மூன்று மணிக்கு எழுப்பி, அவரோடு எவ்விதமான தொடர்புமில்லாத தேவனுடைய பிள்ளை ஒருவருக்காக ஜெபம்பண்ணும்படி ஏவினார். ஜெபத்தை ஆரம்பித்த பின்பு, ஜெபத்தை முடிக்கக் கூடாத அளவிற்கு அவரைக் குறித்துப் பெரிய பாரம்

வந்தபடியால், காலை ஒன்பது மணிவரை அவர், தன் பாரம் தீருமட்டும், அவருக்காகப் பெருமூச்சோடு ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். இரண்டு வருடங்களுக்குப் பின்பு இந்தச் சகோதரன், தான் யாருக்காக ஜெபம்பண்ணினாரோ, அந்த நபரைச் சந்திக்க நேரிட்டபோது அந்தச் சமயத்தைக் குறிப்பிட்டுப் பேசினார். அப்போது அவர், தான் அவ்வேளையில் கொடிய வியாதியால் மரண வாசல் மட்டும் சென்று திரும்பி வந்ததாகப் பதில் கூறினார்.

வில்லியம் சதர்லாண்டு என்பவர் ஒருமுறை தனது உத்தியோக சம்பந்தமாக, அதிகப் பணத்தை எடுத்துக்கொண்டு, ஓர் இடத்துக்கு ஒரு காட்டின் வழியாகத் தனிமையாகப் போக வேண்டியதாயிருந்தது. அவ்விதம் காட்டின் வழியே சென்று கொண்டிருந்தபோது, திடீரென ஒருவித திகில் அவருக்கு உண்டாயிற்று. அச்சமயம் அவர் ஜெபம்பண்ணும்படி ஏவப்பட்டார். உடனே அவர் அந்த ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து, முழங்காற்படியிட்டு கர்த்தர் தன்னைக் காக்கும்படி தன்னை ஒப்புவித்து ஜெபம்பண்ணினார். பிறகு அவர் தைரியமடைந்து தன் வழியே போய்த் தன் வேலையை முடித்துவந்தார். அதே சமயத்தில் வீட்டில் அவருடைய தாயாரும், தனது மகனுக்கு ஏதோ ஆபத்து வருவதாக உணர்ந்து ஆவியில் ஏவப்பட்டு ஜெபம்பண்ணினார்கள். இந்த அனுபவம் அவர்கள் இருவருக்கும் புதுமையாக இருந்தது. அநேக வருடங்களுக்குப் பின் வில்லியம் சதர்லாண்டுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், ‘நான் மரணப்படுக்கையில் இருக்கிறேன். உம்மிடம் சொல்ல வேண்டிய ஒரு முக்கிய விஷயம் உண்டு. உடனே வாரும் - ஒரு சிநேகிதன்’ என்று ஒரு விலாசம் குறிப்பிட்டு எழுதியிருந்தது. அவர் உடனே புறப்பட்டுப் போய் அந்த நபரைக் கண்டுபிடித்தார். அப்போது அவர், பல வருடங்களுக்கு முன் வில்லியம் சதர்லாண்டு மிகுதியான பணத்துடன் காட்டின் வழியே தனியே சென்றுகொண்டிருந்தபோது, அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, பணத்தைத் திருடிக்கொண்டு ஓடும்படி, தான் காட்டில் ஒளித்திருந்ததாகவும், அப்போது வில்லியம் சதர்லாண்டு அந்த இடத்திற்கு வந்தவுடனே முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணினதாகவும், அதைக் கண்டவுடனே தன்னால் ஒன்றும் செய்யக் கூடாமல் தன் கை கால்கள் தளர்ந்து போனதாகவும் உரைத்தார். மேலும், அவர் தன்னை மன்னித்துத் தனக்காக ஜெபம்பண்ணும்படி அவரிடம் மன்றாடினார். வில்லியம் சதர்லாண்டு அவருக்குக் கர்த்தராகிய இயேசுவைப் பற்றிக் கூறி, அவருக்காக ஜெபம்பண்ணினார். அந்த மனிதன் இரட்சிக்கப்பட்டு சமாதானத்துடன் இவ்வுலகை விட்டுக் கடந்துபோனார். ஆவியின் ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து ஜெபம்பண்ணினதினால் உண்டான பலனை நாம் இதில் காண்கிறோமல்லவா?

இவ்விதமாகத் தேவாவியானவருடைய ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து ஜெபம்பண்ணும்போது, குறிப்பாக ஜெபம் பண்ணும் விஷயத்துக்காக அல்லது நபருக்காக மிகுதியான பாரம் உண்டாகிறபடியால் பெருமூச்சுடன் ஜெபம்பண்ணும் அனுபவம் உண்டாகிறது (எசே. 21 : 6). இதுவே ஆவியில் ஜெபம்பண்ணுவதின் மற்றொரு பகுதியாகும். சாதாரணமாகப் பெருமூச்சுடன் ஜெபம்பண்ணும்போது ஜெபத்திற்குப் பதில் உடனேயே கிடைக்கிறது. கர்த்தராகிய இயேசுவும் பெருமூச்சு விட்டு ஜெபம்பண்ணியது குறிப்பிடத்தக்கதாகும் (மாற்கு 7 : 34). இது ஜெப ஜீவியத்தின் ஒரு உன்னத நிலையாகும். நாம் ஆவியானவருக்குக் கீழ்ப்படியும்போது மாத்திரமே இவ்வனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். சில வேளைகளில் ஆவியானவர் ஏவும்போது சரீரக் களைப்பென்றோ, இப்போது வசதி இல்லையென்றோ, மற்றவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்களென்றோ எண்ணி அந்த ஏவுதலுக்குக் கீழ்ப்படியாமலிருந்தால்,

படிப்படியாய் தேவன் நமக்கு ஜெபம்பண்ணும்படி ஏவுதல் தருவதை நிறுத்திவிடுவார். ஏனென்றால், "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை" என்று தேவன் சொல்லியிருக்கிறார் (ஆதி. 6 : 3). இக்காலத்தில் கர்த்தருடைய ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து ஜெபம்பண்ணாதபடியால் தங்களுடைய ஜெப ஜீவியத்தை இழந்துபோயிருக்கும் பலர் உண்டு. அன்பான சகோதரனே! உம் நிலை என்ன? நீர் ஆதியில் கொண்டிருந்த ஜெப ஜீவியத்தை இழந்துபோனதன் காரணம், பல சந்தர்ப்பங்களில் கர்த்தர் உமக்குத் தந்த ஏவுதல்களுக்கு நீர் கீழ்ப்படியாமற்போனதேயாகும். அச்சந்தர்ப்பங்களை ஆராய்ந்தறிந்து, அறிக்கைபண்ணி, உம்முடைய பிரதிஷ்டைகளைப் புதுப்பிப்பீரேயானால், ஆவியில் பெருமூச்சுவிட்டு ஜெபம்பண்ணும் கிருபையைத் தேவன் மீண்டும் உமக்குத் தந்து, அதனிமித்தம் அநேகர் உம் மூலம் பெரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள உதவி செய்வார்.

தேவனுடைய சித்தத்தின்படி ஜெபம்பண்ண வேண்டும்

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (I யோவான் 5 : 14). சிலர் சில காரியங்களுக்காக மிக ஊக்கமாக ஜெபம்பண்ணியும் அதற்குப் பதில் கிடைக்காதபடியாலும் தங்கள் எதிர்பார்த்தலுக்கு மாறாகப் பதில் வந்தபடியாலும் தங்கள் ஜெபஜீவியத்தில் மிகவும் சோர்ந்து போகிறார்கள். இவ்விதமாக அவர்களுக்குப் பதில் கிடைக்காமற் போவதன் காரணத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய யாக்கோபு தன் நிருபத்தில் இவ்விதமாய்க் கூறுகிறார்: "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" (யாக். 4 : 3). ஆகவே, நம்முடைய இச்சைகளை அல்லது விருப்பங்களை நிறைவேற்றும்படி ஜெபம்பண்ணினால் அந்த ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதில்லையென்று நாம் அறிந்துகொள்கிறோம். தேவசித்தத்தின்படி ஜெபிக்க வேண்டும் என அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுவது போலவும், கர்த்தராகிய இயேசு, "உம்முடைய சித்தம் ... செய்யப்படுவதாக" என்று ஜெபம்பண்ண மாதிரி காண்பித்தது போலவும் சிலர் ஜெபம்பண்ண மனமற்றவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் தேவ ஒழுங்குக்கு இசையாது, தங்கள் விருப்பங்களை விட்டுவிடமுடியாதவர்களாய் அவைகளுக்காகப் பலவந்தமாய் ஜெபம்பண்ணுகிறார்கள்; விவாகம், உத்தியோகம், இடமாற்றம் முதலிய பல காரியங்களுக்காகத் தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். அன்பானவர்களே! நீங்கள் இவ்விதமாய் விண்ணப்பம் செய்யாமல், உலகப்பிரகாரமான எந்தக் காரியத்தையும் தேவ சித்தத்துக்கு ஒப்புவித்து ஜெபம்பண்ணி கர்த்தருடைய கரத்தில் விட்டுவிட வேண்டும். அப்போது அவர் தம்முடைய சித்தத்தின்படியே உங்களுக்குச் செய்வார். அது உங்களுக்கு நன்மையாகவே இருக்கும்.

சவுல் இராஜா மரித்த பின்பு, தாவீது அவன் ஸ்தானத்தில், தான் இராஜாவாக வேண்டுமென்று அறிந்திருந்த போதிலும், தனக்கு முன்பாக இருந்த இடையூறுகள் நீங்கித் திறந்த வாசல் இருந்தபடியால், அதுதான் தேவசித்தம் என்று எண்ணி, அவன் ராஜ ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளவில்லை. தேவசித்தத்திலிருந்து தான் தவறிவிடுவானோ என்ற பயத்தால் அவன், "நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா" என்று கர்த்தரிடத்தில்

விசாரித்தான் (II சாமு. 2 : 1). அதற்குக் கர்த்தர் அவனுக்கு அனுகூலமான பதில் அளித்தபோதிலும், அவன் திரும்பவும் தேவ சித்தத்தைக் குறிப்பாக அறிந்துகொள்ளும்படி, “எவ்விடத்திற்குப் போகலாம்” என்று கேட்டு, தேவசித்தத்தைக் குறிப்பாக அறிந்து கொண்டான். இவ்விதமாகப் பல சந்தர்ப்பங்களிலும் தன் ஜீவியத்தில் தேவசித்தத்தை அறிந்து அதன்படி செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தினபடியால் அவன் தன் ஜீவியத்தின் ஆரம்பத்தில் பல கலக்கங்களையும் பிரச்சினைகளையும் சந்தித்தபோதிலும், அவன் முடிவு ஆசீர்வாதமும் மேன்மையுமாயிருந்தது. ஆகவே, எல்லா விஷயங்களுக்காகவும் தேவசித்தத்தின்படி மாத்திரம் ஜெபம்பண்ண வேண்டுமென்பது உங்கள் எண்ணமாயிருக்குமானால், உங்கள் ஜீவியம் ஆசீர்வாதமும், முடிவு மகிமையுமாயிருக்கும். ஆகையால்தான், “அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்குமுன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்” என்று கூறப்பட்டுள்ளது (I யோவான் 3 : 22). நம் தேவன் எவ்வளவு நல்லவர்!

அன்றியும் கர்த்தராகிய இயேசு கெத்செமனேயில் தேவசித்தத்திற்குத் தம்மை ஒப்புவித்து ஜெபம்பண்ணியதைக் கவனிக்கலாம். அவர் அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணத் தயங்கவில்லை என்பதை நாம் மிகத் தெளிவாகக் காண்கிறோம் (யோவான் 18 : 11; மத். 20 : 22). ஆனால் கஷ்ட வேளையில் மனுஷன் தயங்குவது இயல்பு என்பதையும், அவ்வேளையில் பெலவீனத்தால் தயங்கினாலும் தேவசித்தத்திலிருந்து விலகாது தைரியமாய் அவன் ஒப்புவிக்க வேண்டும் என்பதையும் காண்பிக்கும்படியாகவே, அவர், “பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்”(லூக்கா 22 : 42). நண்பரே! அவ்விதமே நீரும் உம்மைத் தேவசித்தத்திற்கு ஒப்புவித்து ஜெபம்பண்ணுகிறீரா? கொடிய சோதனைகளுக்கு முகங்காட்டிக் கலங்கும்போது, சில வேளைகளில் கண்ணீர் சொரிய வேண்டியது வரும். அச்சூழ்நிலைகளில் நாம் கர்த்தராகிய இயேசுவைப்போல் தேவசித்தத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

“அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்”பட்டார் என்று எழுதப்பட்டிருக்கிறது (எபி. 5 : 7). எனவே, கடும் சோதனைகளின் மத்தியில் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபம்பண்ணும்போது, நம்முடைய ஜெபம் கேட்கப்படுவது மாத்திரமல்ல, லூக்கா 22 : 43-இல், “அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான்” என்று வாசிப்பது நம் உள்ளத்தைப் பொங்கச் செய்கிறதல்லவா? அந்தப் பெலத்தின் மூலமாக, கல்வாரியில் அவர் ஒரு சிறு பிழையும் இழைக்காதவராய், எவ்வித முறுமுறுப்புமின்றி முழு உலகத்தின் பாரத்தையும் சுமந்து நம் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்து இரட்சிப்பை உண்டுபண்ணி வைத்திருக்கிறார். இந்த வசனத்தில் “அப்பொழுது” என்னும் வார்த்தை மிக முக்கியமானது. அவர், “என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்று ஜெபம்பண்ணினபோதுதான் ஒரு தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான் என்பதைக் கவனிக்கத்

தவறாதிருங்கள். சகோதரனே! நீரும் இவ்விதம் மனப்பூர்வமாய்த் தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபம்பண்ணுவீரேயாகில் உம்மால் தாங்கக் கூடாத எவ்வளவு கடுமையான கஷ்டமாயிருந்தாலும் மிக இலகுவாய் அதைத் தாங்கி, செய்ய வேண்டியவற்றை நேர்த்தியாகச் செய்து, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க தேவன் உமக்குப் பெலன் அருளுவார்.

விழித்திருந்து ஜெபம்பண்ண வேண்டும்

"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" என்று கர்த்தராகிய இயேசு கூறினார் (மத். 26 : 41). அவருடைய சீஷர்கள் கெத்செமனேயில் ஜெபத்தில் தூங்கினபோது, அவர்கள் விழித்திருந்து ஜெபம்பண்ணும்படி அவர் இவ்வார்த்தைகளைச் சொன்னார். இக்காலத்திலும் தேவனுடைய பிள்ளைகள் சிலர் ஜெபத்தில் தூங்குகிறார்கள். கர்த்தராகிய இயேசு, "ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" என்று கூறியதின் பொருளை விளங்கிக்கொள்ளாது, தாங்கள் ஜெபத்தில் தூங்குவது குற்றமல்ல; மாம்ச பலவீனத்தால் ஜெபத்தில் தூங்கலாமென்று எண்ணி, பிசாசினால் வஞ்சிக்கப்பட்டிருக்கிற சிலர் இருக்கின்றனர். கர்த்தராகிய இயேசு அவ்விதக் கருத்துடன் இவ்வார்த்தைகளைச் சொல்லவில்லை. அவ்வெண்ணத்துடன் அவர் சொல்லியிருந்திருப்பாராயின் இரக்கமுள்ள அவர், தூங்கிக்கொண்டிருந்த அவர்களை, "நித்திரைபண்ணுகிறதென்ன? ... எழுந்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" என்று சொல்லி எழுப்பியிருந்திருக்கமாட்டாரே (லூக்கா 22 : 46). மாம்சம் ஆவிக்கு விரோதமாய்ப் போராடுகிறது என்பதை அறிந்து, அவர்கள் ஆவியில் உற்சாகமடைந்து, மாம்ச பெலவீனத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதே அவரது நோக்கமாயிருந்தது. தாவீது, "உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்" என்று ஜெபம்பண்ணினான் (சங். 51 : 12). இவ்விதம் உற்சாகமான ஆவி சரீர பெலவீனத்தைத் தாங்கும்போது நம்மால் விழித்திருந்து ஜெபம்பண்ண முடியும். மேலும் அப். பவுல், "ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" என்று எழுதுவதால் (கொலோ. 4 : 2), ஸ்தோத்திரத்தின் மூலம் விழித்திருந்து ஜெபம்பண்ண முடியும் என்று நாம் அறிந்துகொள்கிறோம்.

கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்கள் துக்கத்தால் நித்திரைபண்ணுவதைக் கண்டு அவர்களை எழுப்பினார் (லூக்கா 22 : 45, 46). இதைப் போலவே இக்காலத்திலும் சிலர், அதிகம் ஜெபம்பண்ண வேண்டுமென்கிற எண்ணத்துடன் சில காரியங்களுக்காகப் பாரத்துடனும் துக்கத்துடனும் ஜெபம்பண்ண ஆரம்பித்தாலும் சீக்கிரமாய்த் தூங்குவதை நாம் காணலாம். துக்கப்படுகிறவர்களுக்கு ஸ்தோத்திரிக்க முடியாது, இவர்கள் ஜெபத்தில் ஸ்தோத்திரம் செலுத்தாதபடியால், ஜெபத்தில் தூங்குகிறார்கள்.

வியாதி, நிந்தை, வறுமை, மனுஷரால் கைவிடப்படுதல் முதலியவற்றால் நாம் மனதுக்கத்துடன் ஜெபம்பண்ண ஆரம்பிக்கும்போது, கடந்த காலங்களில் இவ்விதத் தருணங்களில் தேவன், நமக்கும் மற்றும் தேவஜனங்களுக்கும் கொடுத்த விடுதலையையும், அவருடைய சர்வ வல்லமையையும் சிந்தித்து அவரைத் துதிக்க வேண்டும். இவ்விதம் சிறிதுநேரம் நாம் துதிக்கும்போது, நம் இருதயத்தின் துக்கம் நீங்கி, விசுவாசம் அவ்விடத்தை ஆட்கொண்டு உற்சாகமுள்ள ஆவி உருவாகிறது. இதன் பின்பு இந்த உற்சாகமுள்ள ஆவியால், எந்தக் காரியத்திற்காக நாம் ஜெபம்பண்ண

ஆரம்பித்தோமோ, அந்தக் காரியத்திற்காக விழித்திருந்து ஜெபம்பண்ணுவது மிகவும் இலகுவாகிறது. இவ்விதமாகக் கவலையுடன் இருக்கும் சந்தர்ப்பங்களில் ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருப்பது தேவ ஒழுங்கானபடியால், I தீமோத்தேயு 2 : 1 - இல், விண்ணப்பங்கள், ஜெபங்கள், வேண்டுதல்கள், ஸ்தோத்திரங்கள் ஆகிய ஜெபத்தின் நான்கு அம்சங்களில், நான்காவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்தோத்திரமானது, பிலிப்பியர் 4 : 6 - இல், "ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும்" என்று கூறப்பட்டிருப்பதில் ஜெபத்தின் முதல் இடத்தை எடுத்துக்கொள்ளுகிறது. ஆகவே, விழித்திருந்து ஜெபம்பண்ண, ஸ்தோத்திரமானது முதலாவதாகச் செலுத்தப்பட வேண்டும், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருப்பதின் முதற்பகுதி இதுவாகும்.

லூக்கா 21 : 36-இல், ஜெபத்தில் விழித்திருக்க வேண்டிய மற்றொரு பகுதியை நாம் பார்க்கிறோம். கர்த்தராகிய இயேசு விழித்திருந்து ஜெபம்பண்ண வேண்டும் என்று சொன்னது மாத்திரமல்ல, இங்கு "ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" என்றும் சொல்லுகிறார். ஆகையால் எந்தக் காரியத்திற்காகவும் ஜெபம் பண்ணிய பின்பு விழிப்பு அவசியமாயிருக்கிறது. நாம் ஒரு காரியத்திற்காக ஊக்கமாய் ஜெபம்பண்ணின பின் அதைப் பெற்றுக்கொள்வதற்குத் தாமதமாகும் போது சோர்வு, பயம் முதலியவை உண்டாகும். தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருப்பது போல் தோன்றும் இவ்வேளையில் சோர்வு, பயம், வேதனை, துக்கம் முதலியவைகளுக்கு நாம் இடங்கொடாதிருப்பதே ஜெபம்பண்ணின பின் விழித்திருப்பதாகும். ஆதியாகமம் 15 - ஆம் அதிகாரத்தில் ஆபிரகாம் தேவனிடம் ஜெபம்பண்ணி, அவரோடு சம்பாஷித்து, குமாரனைப் பெற்றுக்கொள்வதாக வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொண்டதுடன், அதை விசுவாசித்தான் என்றும் நாம் வாசிக்கிறோம். ஆனால் இந்த ஜெபத்துக்குப் பின்பு விழிப்பு இல்லாதபடியால் அவன் சாராளின் சத்தத்துக்குச் செவிகொடுத்து, இன்றைக்கும் வாக்குத்தத்தத்தின் சந்ததிக்கு விரோதமாக இருக்கும் ஒரு சந்ததிக்குக் காரணனாகிய இஸ்மவேலைப் பெற்றான் என்று 16 - ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். ஆம், ஜெபத்துக்குப் பின்பு விழிப்பு எவ்வளவு முக்கியம் என்பதை இச்சம்பவத்தின் மூலம் நாம் கற்றுக்கொள்கிறோம். ஆகவே ஊக்கமாய் ஜெபம் பண்ணி சந்தோஷத்தைப் பெற்றுக்கொண்ட பின் கவலையீனமாயிராது, ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருக்க வேண்டும். யோசபாத், தானியேல் ஆகியோர் அவ்விதமாகவே ஜெபம்பண்ணின பின்பு ஸ்தோத்திரித்ததை முன்பு நாம் பார்த்தோமல்லவா? இதுவே ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருப்பதன் இரண்டாம் பகுதியாகும்.

மேற்கூறிய காரியங்களைக் கருத்திற்கொண்டு விழித்திருந்து ஜெபம்பண்ணத் தேவன்தாமே நமக்குக் கிருபை தருவாராக.

உபவாசத்துடன் ஜெபம்பண்ண வேண்டும்

"ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தாள்" (லூக்கா 2 : 37) என்று எருசலேம் தேவாலயத்திலிருந்த தீர்க்கதரிசியாகிய அன்னாளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் நாம் ஆராயும்போது உபவாச ஜெபத்தின் மூலம் அநேகர் மிகுதியான நன்மைகளையும், மகத்தான ஜெயங்களையும்

அடைந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இயேசுகிறிஸ்து சகலத்தையும் செய்யக்கூடிய சர்வ வல்லமையுடையவராயிருப்பினும், உபவாசத்தின் முக்கியத்துவத்தை நமக்குப் போதிக்கும் பொருட்டு அவர் உபவாசித்து ஜெபம்பண்ணினார்.

மோசே நாற்பது நாட்கள் உபவாசத்துடன் தேவனோடு பேசிக்கொண்டிருந்ததால், ஜனங்களுடைய ஜீவியத்தின் நன்மைக்காகப் பிரமாணங்களைப் பெற்றுக்கொண்டான். தேவன் அவனுடன் பேசியதால் அவனுடைய முகம் பிரகாசமடைந்திருந்தது. "ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேயைப் பார்க்கும்போது, அவன் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டு, அவன் சமீபத்தில் சேரப் பயந்தார்கள்" (யாத். 34 : 30). இவ்விதம், உபவாச ஜெபத்தால், நம் ஜீவியத்திற்குத் தேவையான ஆலோசனைகள், பிரமாணங்கள் ஆகியவற்றைத் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல, மற்றவர்களுக்கு முன்பாகப் பிரகாசமான ஜீவியத்தையும் நாம் பெற்றுக்கொள்ளலாம். தேவன் மனுஷனை எவ்வளவாய்க் கனம்பண்ணுகிறார்!

தாவீது சகலவித ஐசுவரியங்களாலும் நிறைந்த இராஜாவாயிருந்தபோதிலும், "உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினேன்" என்று கூறுகிறான் (சங். 35 : 13). இது ஆங்கிலத்தில், "I humbled my soul with fasting" எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது, உபவாசத்தால் ஆத்துமா தாழ்மையடைகிறது என்பதை ஆங்கில மொழிபெயர்ப்பில் நாம் தெளிவாகக் காண்கிறோம். இவ்விதம் நம் ஆத்துமா தாழ்மையடையும்போது,தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கும் தேவன், உபவாசத்தின் மூலம் நம் ஜீவியத்திற்குத் தேவையான கிருபைகளை அளிக்கிறார். அத்துடன் அதே வசனத்தில் அவன், "அவர்கள் வியாதியாயிருந்தபோது இரட்டு என் உடுப்பாயிருந்தது" என்றும் கூறுகிறான். ஆகவே கடுமையான வியாதியினால் கஷ்டப்படுகிறவர்களுக்காக நாம் உபவாசித்து ஜெபம்பண்ண வேண்டும். ஆனால் இக்காலத்தில் சிலர் பிறருடைய சுகத்திற்காக சில நாட்கள் ஜெபம்பண்ணி, சுகமடையாவிட்டால் தங்கள் விசுவாசத்தை இழந்துவிடுகின்றனர். ஆனால் உபவாச ஜெபம் கொடிய வியாதிகளையும் சுகப்படுத்தக்கூடிய வல்லமையுள்ளது.

யூதா ஜனங்களுக்கு விரோதமாக மூன்று பலத்த ஜாதிகள் யுத்தத்துக்கு வந்தபோது, அவர்கள் உபவாசத்துடன் தேவனைத் தேடினார்கள் (II நாளா. 20 : 3). இந்த ஜெபத்தின் மூலமாக அவர்கள் தங்கள் சத்துருக்களின்மேல் பரிபூரண ஜெயம் பெற்றுக் களிகூர்ந்தார்கள். இவ்விதமாக நாமும் உலகம், மாம்சம், பிசாசு என்பவைகளை ஜெயித்துப் பூரண ஜெயஜீவியம் செய்ய உபவாச ஜெபம் மிகவும் இன்றியமையாததாகும்.

தேவனுடைய ஜனங்கள் தங்களைத் தாழ்த்துகிறதற்கும், செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும், தேவன் சத்துருவை விலக்கித் தங்களுக்குத் துணை செய்வதற்கும், உபவாசித்து ஜெபம்பண்ணியதை எஸ்றா 8 : 21, 22 - இல் நாம் காண்கிறோம். உபவாசத்தைக் கனம்பண்ணுகிற தேவன், அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றியதைக் கவனிக்கும் போது அது உபவாச ஜெபத்தின் மீதுள்ள நம்முடைய ஆர்வத்தைத் தூண்டிவிடுகிறதன்றோ!

மேலும் நெகேமியா, எருசலேமின் அலங்கங்கள் இடிக்கப் பட்டு, அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு, ஜனங்கள் தீங்கையும் நிந்தையையும் அனுபவித்துக்கொண்டிருந்ததைக் கேட்டபோது

உபவாசித்து ஜெபம்பண்ணினான் (நெகே. 1 : 3, 4). இவ்விதமாகவே, தேவனுடைய சபையானது ஆதி நிலையை நஷ்டப்படுத்தி, சோதனைகளாகிய அக்கினியில் எரிந்து, ஆதி அன்பை இழந்து காணப்படும்போது நாம் உபவாசித்து ஜெபம்பண்ண வேண்டியது மிக அவசியம்.

தேவமகிமையால் நிறைந்திருந்த சபை, கொஞ்சங் கொஞ்சமாக அம்மகிமையை இழந்துபோவதை இந்நாட்களில் நாம் காண்கிறோம். இச்சந்தர்ப்பத்தில் உபவாசித்து அழுது ஜெபம்பண்ணுவதற்குப் பதிலாக, பலரும் பல காரியங்களைப் பேசுவதிலும் மற்றவர்களைக் குற்றப்படுத்துவதிலும் தங்கள் பெலனையும் சமயத்தையும் செலவு செய்கின்றனர். ஆனால் நெகேமியாவைப் போல் உபவாசித்து அழுது ஜெபம்பண்ண ஆரம்பித்தால், எழுத்திற்குரிய எருசலேமைப் பழுதுபார்க்கச் செய்து சீரடையச் செய்த தேவன், இன்றைய சபையையும் மறுபடியும் உயிரடையச் செய்து மகிமையால் நிரப்புவார். அதற்காக நண்பனே! நீர் உபவாசித்து அழுது ஜெபம்பண்ணும் நெகேமியாவாக மாறினால் எவ்வளவு நலமாயிருக்கும்! அன்றியும் எரேமியா தீர்க்கதரிசி, தன் ஜனத்தின் பின்மாற்றத்தை எண்ணி அழுது ஜெபம்பண்ணினதைக் குறித்து, “என் ஜனமாகிய குமாரத்தியின் நொறுங்குதலினிமித்தம் கண்ணீர் சொரிகிறதினால் என் கண்கள் பூத்துப்போகிறது; என் குடல்கள் கொதிக்கிறது; என் ஈரல் இளகித் தரையிலே வடிகிறது; குழந்தைகளும் பாலகரும் நகரத்தின் வீதிகளிலே மூர்ச்சித்துக்கிடக்கிறார்கள்”; “ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும்பகலும் அழுவேன்” (புல. 2 : 11; எரே. 9 : 1) என நாம் வாசிக்கிறோம். மேலும் புலம்பல் 2 : 18-இல், “சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்புவிழி சும்மாயிருக்க வொட்டாதே” என்று அவன் கூறுவதுபோல நாமும் செய்ய தேவன் தாமே நமக்குக் கிருபை தருவாராக.

எஸ்தரும், மொர்தெகாயும், பல யூதரும் உபவாசித்து ஜெபம்பண்ணினபடியால் (எஸ்தர் 4 : 3, 16), அழிக்கப்படவிருந்த ஆயிரக்கணக்கான யூதர்கள் உயிர் பிழைத்து மகிழ்ந்து, பூரீம் பண்டிகையைக் கொண்டாடினர் (எஸ்தர் 9 : 21, 28). அன்றியும், நினிவே பட்டணத்தார் தங்கள் உபவாச ஜெபத்தால் அழிவினின்று காக்கப்பட்டனர் (யோனா 3 : 5 - 7). இக்காலத்திலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் நாள்தோறும் பாவத்தில் மரித்து நித்திய நரகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர். இவர்களை இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலிருந்து விடுவிக்கும் பொருட்டு தேவனுடைய ஜனங்கள் உபவாசித்து ஜெபம்பண்ண வேண்டியது அவசியமாகும். நித்தியத்தில் நம் சகோதர சகோதரிகள் நரகத்தில் என்றென்றுமாகப் பங்கடைவார்களாயின் அது எவ்வளவு வேதனைக்குரியதாயிருக்கும்! ஆகவே உபவாசத்துடன் அவர்களுக்காக ஜெபம்பண்ணுவோமாக.

யோவேல் தீர்க்கதரிசியின் நாட்களில் இஸ்ரவேலரின் நிலவரத்தையும் அவசியத்தையும் அறிந்த தேவன், “பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள்” என்று கூறினார் (யோவேல் 2 : 15). இந்நாட்களில் நாம் கவலையீனமாயிராது நிச்சயமாகவே உபவாச நாட்களை நியமித்து ஜெபம்பண்ண வேண்டும். இதை நாம் தனித்தனியாகச் செய்வதுடன் ஜனத்தைக் கூட்டிச் சபையாகவும் செய்ய வேண்டும். அப்படிச்செய்வோமாயின், தேவன் சீக்கிரமாய் நம் மத்தியில் அனுப்பும் பெரிய எழுப்புதலை நாம் அனுபவித்துக் களிகூரலாம்.

அப். பவுலும் அவருடன் இருந்தவர்களும் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், தங்களைத் தேவ ஊழியரென்று விளங்கப்பண்ணும்படி உபவாசித்து ஜெபம்பண்ணுகிறவர்களாயிருந்தார்கள் (II கொரி. 6 : 3, 5). இக்காலத்தில் ஊழியர் பலரும் உபவாச ஜெபத்தை அசதியாக விட்டுவிடுகிறபடியால் கர்த்தருடைய ஊழியம் குற்றஞ்சாட்டப்படுகிறது.

அன்றியும், அப். பவுல், விசுவாசிகளின் உபவாச ஜெபத்தின் முக்கியத்துவத்தைக் கொரிந்தியருக்கு எழுதின தனது நிருபத்தில் எடுத்துக் கூறுகிறார். புருஷனையும் மனைவியையும் குறித்து, "தேவன் இணைத்ததை மனுஷன்பிரிக்காதிருக்கக்கடவன்" என்னும் பிரமாணம் இருப்பினும், உபவாசம் விசுவாசிகளுடைய ஜீவியத்தில் மிகமுக்கியமானதாயிருக்கிறபடியால், "உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க"லாம் என்று அவர் புத்தி சொல்லுகிறார் (I கொரி. 7 : 5). அன்பானவர்களே, உபவாசம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது! உங்கள் உபவாச ஜீவியம் எப்படி இருக்கிறது? உபவாச ஜெபத்திற்கு உங்கள் ஜீவியத்தில் முக்கியத்துவம் கொடுப்பீர்களானால், உங்கள் மேலும் உங்கள் குடும்பத்தின் மேலும் தேவன் பெரிய ஆசீர்வாதங்களைப் பொழிந்தருளுவார். நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சையின்படி நடந்து, உங்கள் வேலைகளையெல்லாம் கட்டாயமாய்ச் செய்தால், உபவாசத்தால் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளத் தவறிவிடுவீர்கள் என்பதை மறவாதீர்கள் (ஏசாயா 58 : 3, 4). ஆகவே உபவாச நாட்களில் மோசே கர்த்தருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்து அவன் முகம் பிரகாசித்ததுபோல (யாத். 34 : 28 - 30), நாமும் கர்த்தருடன் பேசிக்கொண்டிருந்து அவருடைய மகிமையால் நிரப்பப்படக் கர்த்தர் நமக்கும் கிருபை புரிவாராக. அன்றியும், கொர்நேலியு உபவாசத்துடன் ஜெபம்பண்ணினபோது, தேவன் அவனுக்கு உடனேயே பதிலளித்தது (அப். 10 : 30 - 32), நாமும் உபவாசித்து ஜெபம்பண்ணும்படி நமக்கு ஊக்கமளிக்கிறபடியால், நாம் உபவாச ஜெப ஜீவியத்தில் வளரத் தீர்மானிப்போமாக.

ஒரு அம்மையார் தன் உபவாச ஜெபத்தின் அனுபவத்தைப் பின்வருமாறு கூறுகிறார்கள் : 'நான் ஒரு முறை தொடர்ச்சியாக நாற்பது நாட்கள் உபவாசித்து ஜெபம்பண்ணியதுடன், மற்றும் பலமுறை உபவாசித்து ஜெபம் செய்திருக்கிறேன். இவ்வித சந்தர்ப்பங்களில் நான் சரீரத்தில் உணர்ச்சியற்று, தேவதரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் பெற்றிருக்கிறேன். பூலோகத்திலிருக்கும்போதே பரலோகத்தின் இன்பத்தை அனுபவிப்பது எவ்வளவு இனிமையான அனுபவம்!'

கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களால் துரத்தக்கூடாதிருந்த பிசாசை உபவாச ஜெபத்தால் துரத்தக்கூடும் என்று அவர்களுக்குப் போதித்தார் (மாற்கு 9 : 29). நாமும் பிசாசினால் பீடிக்கப்பட்டவர்களுக்காக உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்களை விடுதலையாக்குகிறவர்களாயிருக்க வேண்டும்.

மேலும், கர்த்தராகிய இயேசு நாற்பது நாள் உபவாசமா யிருந்த பின்பு சோதிக்கப்பட்டார். அதன் முடிவிலே, "உடனே தேவதூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்" (மத். 4 : 11) என்றும், "பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப்போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று" (லூக்கா 4 : 14) என்றும் நாம் காண்பது எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது! இவ்விதமாக உபவாசித்து ஜெபம்பண்ணி அதன்பின் வரும் சோதனைகளை ஜெயித்தால்,

தேவனுடைய உதவியையும் தேவ பெலத்தையும் நாம் பெற்றுக்கொள்ளலாம். நம் மூலமாய்க் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும். நாம் உபவாச ஜெபத்தில் வளர்ந்து இப்பாக்கியங்களைப் பெற்றுக்கொள்வோமாக.

கர்த்தராகிய இயேசு உபவாசித்து ஜெபம்பண்ணினது மாத்திரமல்ல, ஜெபம்பண்ணும்படி உயர்ந்த மலைக்குப் போனார் (மத். 17 : 1). சாதாரணமாக, மலைகள் உயர்ந்தனவாக இருந்தாலும் இங்கு "உயர்ந்த மலை" என்று சொல்லப்பட்டிருப்பதால் கர்த்தராகிய இயேசு போன இந்த மலை அதிக உயரமானதாக இருந்திருக்கவேண்டும் என நாம் அறிகிறோம். எனவே உபவாசிப்பது மாத்திரமல்ல, உயர்ந்த மலையாகிய அதிகக் கஷ்டம் அனுபவித்து ஜெபம்பண்ணும் போது, "அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது" (மத். 17 : 2) என்று எழுதியிருப்பது நம் ஜீவியத்திலும் நிறைவேறும். இப்பிரகாசத்தின் ஓர் அம்சம் கர்த்தருடைய வசைக்கு ஆயத்தப்படுகிற நாம் ஆவியானவரால் மகிமையின் மேல் மகிமை அடைந்து மறுரூபமாக்கப்பட்டுக் கொண்டேயிருப்பதைக் காட்டுகிறது (II கொரி. 3 : 18). இதை நிரூபிக்கவே, அப். லூக்கா, இச்சந்தர்ப்பத்தைக் குறித்து, "அவர் ஜெபம் பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று" என்கிறார் (லூக்கா 9 : 29).

ஒருமனதுடன் ஜெபம்பண்ண வேண்டும்

"உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என கர்த்தராகிய இயேசு கூறினார் (மத். 18 : 19). ஒருமனமுள்ள ஜெபம் இரு வகைப்படும்.

முதலாவதாக, தேவன் ஜெபத்திற்குப் பதில் கொடுக்க வேண்டுமாயின் மனுஷனுக்குத் தேவனோடு ஒருமனம் தேவை. மனுஷனுடைய பாவங்கள், அவனுடைய ஜெபங்களுக்குத் தேவன் செவிகொடுக்கக் கூடாதபடிக்குத் தடைபண்ணுகின்றன (ஏசாயா 59 : 2). இதைக் குறித்தே தேவன் ஏசாயா 1 : 15-இல், "நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன்" என்கிறார். சவுல் இராஜா கர்த்தருடைய கட்டளையை மீறிப் பாவம் செய்த பின்பு கர்த்தரைத் தேடினான் (I சாமு. 15 : 24, 25). ஆனால் தேவன் அவனுக்குச் செவிகொடாதபடியால், அவன், தேவன் தன்னைக் கைவிட்டார் என்றும், அவர் தனக்கு மறுஉத்தரவு அருளவில்லை என்றும் அலறினான் (I சாமு. 28 : 15). தேவன் தாம் தெரிந்தெடுத்து இராஜாவாக்கின சவுல் பாவம் செய்தபோது அவனுடைய ஜெபத்திற்கு மறுஉத்தரவு அருளாதிருந்தார்.

ஆகையால் தேவசமுகத்தை விட்டு நம்மைப் பிரிக்கிறதான சுயசித்தம் செய்தல், பெருமை, கசப்பு போன்ற சுபாவங்கள், கர்த்தரின் கட்டளைகளை மீறுதல் முதலியவற்றை நாம் அறிக்கை செய்து தேவனோடு ஒப்புரவாக வேண்டியது மிகவும் அவசியம். இதை அறிந்த அப். பவுல், "தேவனோடே ஒப்புரவாகுங்கள்" என்று வேண்டிக்கொள்ளுகிறார் (II கொரி. 5 : 20). இவ்விதமாகத் தேவனோடு ஒப்புரவான பின்பு அல்லது ஒருமனப்பட்ட பின்பு மட்டுமே நம்முடைய ஜெபம் கேட்கப்படும்.

மனுஷரோடு ஒருமனமாக இருந்து ஜெபம்பண்ணுதல் ஒருமனமுள்ள ஜெபத்தின் இரண்டாவது பகுதியாகும். ஆகையால்தான் கர்த்தராகிய இயேசு, "நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது,

ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார்'' என்று கூறியிருக்கிறார் (மாற்கு 11 : 25, 26). அன்றியும், தேவ சமுகத்தில் வரும்போது, “உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், ... முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து” என்று அவர் கூறுகிறார் (மத். 5 : 23, 24). ஆகவே மனுஷரோடு உள்ள ஒப்புரவாகுதலும் மிக அவசியம். சகேயு மனுஷரோடு ஒப்புரவாகிறதற்குத் தீர்மானித்த பின்பே கர்த்தராகிய இயேசு, “இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது” என்று சொன்னார் (லூக்கா 19 : 8, 9).

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஜீவித்த ஏசாவின் சகோதரனாகிய யாக்கோபு, தான் எல்லாவிதத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டவனாயிருந்தபோதிலும், தன் தகப்பனுடைய வீட்டிற்குத் திரும்பிப் போகும்போது முதலாவது தேவனிடம் தன் பெயரைக் கூறி ஒப்புரவானான். பின்பு அவன் தன் சகோதரனாகிய ஏசாவுக்கு வெகுமதிகளை அனுப்பி, அவனைப் பணிந்துகொண்டு அவனோடு நல்மனம் பொருந்தினான் (ஆதி. 32 : 26, 27 ; 33 : 3, 8). அன்றியும் தானியேல் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாகக் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாக இருந்ததை நாம் அறிவோம் (தானி. 6 : 22). ஆகவே அவனுக்காகப் பரலோகம் திறக்கப்பட்டது. தேவன் தம்முடைய தூதனை அனுப்பி சிங்கங்களின் வாய்களைக் கட்டிப்போட்டார். ஆகவே நாமும் தேவனோடும் மனுஷரோடும் ஒப்புரவாக்கப்பட்டவர்களாய், ஒருமனதுடன் ஜெபம்பண்ணுவோமாயின், பட்சபாதமில்லாத தேவன் நம் ஜெபங்களுக்கும் பதிலளிப்பார்.

யாத்திராகமம் 30 : 35-இல் ஜெபத்திற்கு அடையாளமாக இருக்கும் தூபம் (சங். 141 : 2), ஒரு தனிப்பொருளாக இராது, சமநிறையான நான்கு பொருட்கள் பொடிக்கப்பட்டு ஒன்றாக்கப்பட்ட ஒரு பொருளாக இருந்தது. இது ஜெபத்தில் நமக்கு இருக்கவேண்டிய ஒருமனதைக் காண்பிக்கிறது. நாம் 133 - ஆம் சங்கீதத்தை ஆராயும்போது, சகோதரர்கள் ஒருமித்து ஜீவிப்பது நன்மையும் இன்பமுமாய் இருப்பதுடன், அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார் என்றும் காண்கிறோம். ஒருமித்து ஜீவிக்கும்போது இவ்வளவு மேன்மைகள் உண்டானால், ஒருமனதுடன் ஜெபம் பண்ணுவதால் கிடைக்கும் பலனுக்கு அளவுண்டோ! ஆகவே ஒருமனப்பட்டு ஜெபம்பண்ண ஜாக்கிரதையாயிருந்து (எபே. 4 : 3), மிகுதியான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளத் தேவன் நமக்கு உதவி புரிவாராக.

ஒருமனப்பட்டு ஜெபம்பண்ணுவதில் இன்னும் ஒரு முக்கியமான பகுதியுண்டு. அதாவது, ஜெபிக்கும் தனிமனிதனுடைய சிந்தைகள் சிதறாமல், ஒருமனம் அல்லது ஒருமுகம் அடைய வேண்டும். யோசபாத்திற்கு எதிராகத் திரளான ஜனங்கள் வந்தபோது அவன் முதலாவது பயந்ததாக நாம் வாசிக்கிறோம் (II நாளா. 20 : 3). இவ்விதம் யோசபாத் பயந்தபோது, யுத்தத்திற்குப் போகலாமா, சமாதானம் பண்ணலாமா, அதிகமான போர் வீரர்களை இராணுவத்தில் சேர்க்கலாமா, இன்னும் அதிகமான போர் ஆயுதங்களை உண்டுபண்ணலாமா, வேறு ராஜ்யங்களின் உதவியை நாடலாமா என்பவை போன்ற பல சிந்தைகள் அவனுக்குள் வந்து அவன் கலங்கியிருந்திருக்கக் கூடும். ஆனால் அவன் அங்கும்

இங்கும் சிதறடிக்கப்பட்டிருந்த தன் சிந்தையைக் கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்படுத்தினான் என்று நாம் வாசிக்கிறோம். அவன் தனக்குள் ஒருமனப்பட்ட பின்பு ஜெபம்பண்ணி ஜெயங்கொண்டான். “தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது” என நாம் வாசிக்கிறோம் (II நாளா. 16 : 9). இங்கு உத்தம இருதயம் என்பதற்கு மலையாளத்தில், ‘ஏஹாக்ரத’ அதாவது, ஒரே இருதயம் அல்லது ஒரே சிந்தை என்பதைக் குறிக்கும் பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆகவே ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும்போது எழும்பும் சிந்தைகளை அப். பவுல் சொல்வதுபோல் சிறைப்படுத்தி (II கொரி. 10 : 5), சிந்தையைச் சிதறவிடாமல் ஒரே மனதுடன் ஜெபம்பண்ணுவோமாயின், தேவன் அந்த ஜெபங்களுக்குப் பதில் அளித்துத் தம் வல்லமையை விளங்கப்பண்ணுவார்.

உம்முடைய கஷ்ட நஷ்ட, கலக்கமான வேளைகளில் உத்தமமாக ஜெபம்பண்ணினால், உத்தமர்களைத் தேடி பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கும் கர்த்தருடைய கண்கள், உம்மைக் கண்டுபிடித்து, அவருடைய சர்வ வல்லமையை உமது ஜீவியத்திலும் வெளிப்படுத்தும்.

யோசபாத் ஒருமுகப்பட்டு ஜெபம்பண்ணினபடியால், கர்த்தர் அவனுக்குப் பூரண ஜெயத்தைக் கொடுத்ததுடன், சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாத இளைப்பாறுதலையும் அமரிக்கையையும் கட்டளையிட்டார் (II நாளா. 20 : 3, 30). இப்படியே நமக்கும் செய்ய அவர் உண்மையுள்ளவராயிருக்கிறபடியால் ஒருமனதைக் காத்துக்கொள்ள நாம் ஜாக்கிரதையாயிருப்போமாக.

ஊக்கமாக ஜெபம்பண்ண வேண்டும்

“நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை” என நாம் வாசிக்கிறோம் (யாக். 5 : 16,17). ஜெபத்தைக் கேட்கும் தேவன் நாம் எவ்விதமாய் ஜெபம்பண்ணுகிறோம் என்பதைக் கவனித்து அதன்படியே பதில் அளிக்கிறார். ஆகையால்தான், “தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்” என்று சங்கீதம் 145 : 18 - இல் நாம் வாசிக்கிறோம். இதிலிருந்து சிலர் உண்மையாகவும், சிலர் உண்மையின்றி பெயருக்காக அல்லது கடமைக்காகவும் ஜெபம்பண்ணுகிறார்கள் என்று நாம் காண்கிறோம். ஒரு காரியத்திற்காக ஒருவன் உண்மையாக ஜெபம்பண்ணும்போது நிச்சயமாய் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் வைராக்கியம் அவனுக்கு உண்டாகிறது. அப்போது அவன் தன் ஜெபம் கேட்கப்படுவதற்குத் தடையாக இருக்கும் பாவங்களை அறிக்கை செய்து, கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டு, நீதிமானாகிறான். நீதிமான்களே ஊக்கமாக ஜெபம்பண்ணக்கூடும். ஆகையால்தான் நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்று நாம் வாசிக்கிறோம். எலியா நீதிமானாக

இருந்தபடியால்தான் அவ்விதம் ஜெபம்பண்ணி ஜெபத்திற்குப் பதிலைப் பெற்றுக்கொண்டான்.

பழைய ஏற்பாட்டில், யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவுக்குப் பயந்து வியாகுலப்பட்டு, தேவனுடைய ஆசீர்வாதத்திற்காகப் போராடுவதை நாம் காண்கிறோம் (ஆதி. 32 : 7 - 12). இச்சந்தர்ப்பத்தில் அவன் இராத்திரியில் எழுந்து, தன் ஊக்கமான ஜெபத்திற்குத் தடையாயிருந்த தன் மனைவி, பிள்ளைகள் முதலிய எல்லோரையும் ஆற்றிற்கு அக்கரைப்படுத்தி, தான் தனிமையாய் இருந்தது கவனிக்கப்படத்தக்கதாகும் (வச. 22 - 26). அன்றியும் தலை சாய்க்க இடமற்ற கர்த்தராகிய இயேசுவும், இவ்வித ஊக்கமான ஜெபத்திற்காக மலையின்மேல் ஏறித் தனிமையாக இராமுழுவதும் ஜெபம்பண்ணினார் (லூக்கா 6 : 12). மேலும், “அவரோ வனாந்தரத்தில் தனித்துப் போய், ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்” என்றும் நாம் வாசிக்கிறோம் (லூக்கா 5 : 16).

ஆகவே ஊக்கமான ஜெபம் செய்யும்பொருட்டு நாம் நம்முடைய குற்றங்களை அறிக்கை செய்வது மாத்திரமல்ல, தனிமையாக ஜெபம்பண்ணும்படி சூழ்நிலைகளை அமைத்துக் கொள்ளவும் வேண்டும். அதற்காகவே கர்த்தராகிய இயேசு அறைவீட்டுக்குள் பிரவேசித்து, கதவைப் பூட்டி ஜெபம்பண்ணும்படிச் சொன்னார் (மத். 6 : 6).

தானியேல் தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி ஜெயத்தைப் பெற்றுக்கொண்டதைக் கவனிக்க மறவாதீர்! (தானி. 6 : 10). யாக்கோபும் கர்த்தராகிய இயேசுவும் தங்கள் ஊக்கமான ஜெபத்திற்காக இராக்காலத்தைத் தெரிந்துகொண்டதுபோல, நாமும் இராக்காலங்களில் பக்தி வைராக்கியத்துடன் ஜெபம்பண்ண ஆரம்பித்தால், நம் ஜெபம் ஊக்கமான ஜெபமாக மாறி, நாம் மிகுந்த பலனைப் பெற்றுக்கொள்வோம்.

சிலர் தங்கள் ஜெபத்தில் எவ்வித ஊக்கமும் இன்றிச் சிறிது நேரம் தங்கள் காரியங்களைத் தேவனிடம் சொன்ன பின்பு, ‘நடக்கிறது போல் நடக்கட்டும்’ என்று எண்ணி ஜெபத்தை முடித்துவிடுகிறார்கள். இவ்விதமாக ஊக்கமாய் ஜெபம்பண்ணவிடாமல் பிசாசு தங்களை வஞ்சிப்பதை இவர்கள் அறியாது, தேவன் ஜெபத்திற்குப் பதில் தரவில்லையே என்று எண்ணிச் சோர்ந்துபோகிறார்கள். இக்காலத்தில் பிசாசு தேவனுடைய பிள்ளைகளில் சிலரை இவ்விதம் வஞ்சித்துவைத்திருப்பதைக் காண்பது எவ்வளவு வேதனையைத் தருகிறது!

இவ்வித வஞ்சனையிலிருந்து தப்பித்துக்கொள்ளவும், ஜெபத்திற்குப் பதிலைப் பெற்று ஆசீர்வாதங்களை அனுபவிக்கவும், யாக்கோபைப் போல், “நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்” என்று விடாப்பிடியாய் ஊக்கமாய் ஜெபம்பண்ண வேண்டும். ஊக்கமாக ஜெபம்பண்ண வேண்டும் என்பதை வலியுறுத்தும் பொருட்டு, “கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ்செய்யும்வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது” (சங். 123 : 2) என்றும்; “அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும்வரைக்கும் அவரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள்” (ஏசாயா 62 : 7) என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே இவ்விதம் ஊக்கமான ஜெபத்தை நாம் ஏறெடுப்போமாயின், மழை, சுகம் போன்ற நன்மைகளை மாத்திரமல்ல (யாக். 5 : 16, 18), இன்னும் அநேக ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வோம்.

சிலர் தங்கள் சொந்தக் காரியங்களுக்காக ஊக்கமாய் ஜெபம்பண்ணுவார்கள்; ஆனால் மற்றவர்களுக்காகக் கடமைக்காக மாத்திரம் ஜெபம்பண்ணுவார்கள். தேவன் ஜனங்களை அழிக்காதபடி மோசே தன்னை ஈடாக வைத்து ஊக்கமாய் ஜெபம்பண்ணினான் (யாத். 32 : 32). எலியா, மழைக்காக ஊக்கமாக ஜெபம்பண்ணி, தேசத்திற்கு ஆசீர்வாதத்தை உண்டுபண்ணினான். இவ்விதம் நாம் மற்றவர்களுக்காகவும் ஊக்கமாய் ஜெபம் பண்ணுவோமாயின், மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொடுக்கும் ஆசீர்வாதத்தின் பாத்திரங்களாயிருப்போம். இது என்ன பாக்கியம்!

விசுவாசமுள்ளவர்களாய் ஜெபம்பண்ண வேண்டும்

கர்த்தராகிய இயேசு, "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்" (மத். 21 : 22). ஆகவே, நம் ஜெபம் கேட்கப்பட வேண்டுமாயின், நாம் விசுவாசத்துடன் ஜெபம்பண்ண வேண்டும்.

நாம் தானியேலின் ஜெபத்தைக் கவனிக்கும்போது, அவன் விசுவாசத்துடன் ஜெபம்பண்ணியதற்கு அறிகுறியாக ஸ்தோத்திரத்துடன் தன் ஜெபத்தை முடித்தான் என நாம் காண்கிறோம் (தானி. 6 : 10). அன்றியும், அவன் தன் தேவன் பேரில் விசுவாசித்திருந்தான் என நாம் வாசிக்கிறோம் (வச. 23). தேவன் சிங்கங்களின் வாய்களிலிருந்து தன்னைத் தப்புவிக்க வல்லவர் என்று தானியேல் விசுவாசித்தான்; அதனால் விடுதலையையும் பெற்றான்.எபிரெயர் 11 - ஆம் அதிகாரத்தில் விசுவாசத்தினால் ஜெயம் அடைந்தோரின் பட்டியலில், "விசுவாசத்தினாலே ... சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்" என்று எழுதப்பட்டுள்ளது.

கர்த்தராகிய இயேசு ஐயாயிரம் பேரைப் போஷித்தபோது, ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கையில் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, ஆசீர்வதித்தது ஜெபத்திற்கு அடையாளமாக இருக்கிறது (மத். 14 : 19). ஆனால் அவ்விதம் ஜெபம்பண்ணுவதற்கு முன்பு நாம் அவருடைய விசுவாசத்தின் கிரியையைக் காண்கிறோம். ஜெபம்பண்ணினால் நிச்சயமாகவே அந்த ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் பெருகும் என்றும், அவற்றைக்கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷிப்பிக்கக்கூடும் என்றும் அவர் விசுவாசித்தபடியால்தான் ஜெபம் பண்ணுவதற்கு முன்னதாகவே அவர்களை ஐம்பது ஐம்பது பேராக உட்கார வைத்தார். அவர் விசுவாசித்து ஜெபம்பண்ணியது போலவே சம்பவித்தது (லூக்கா 9 : 13-17).

நாம் விசுவாசம் உள்ளவர்களாய் ஜெபம்பண்ணுவோமாயின் ஜெபத்தை ஸ்தோத்திரத்துடன் முடிப்பதோடு, கண்களால் காணாதிருக்கிறதைக் கிடைத்தது என்று விசுவாசித்து அதற்கேற்ற விசுவாசக்கிரியையும் செய்வோம். இவ்விரண்டும் இல்லையேல், நமக்கு விசுவாசம் இல்லையென்பது வெளிப்படுகிறது. சிலர் விசுவாசம் அற்றவர்களாய் சந்தேகத்துடன் ஜெபம்பண்ணுகிறார்கள். தேவனுடைய சர்வவல்லமையைச் சிந்திப்பதால் விசுவாசம் உருவாகிறது. இவ்விதம் விசுவாசித்துக்கொண்டிருக்கும்போது பிசாசானவன் இதற்கு எதிராக இருக்கும் சூழ்நிலைகளைக் காட்டுகிறான். இதனிமித்தம் சந்தேகம் உண்டாகிறது. சந்தேகத்துடன் ஜெபம்பண்ணுகிறவர்களைக் குறித்து, "அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும்

பெறலாமென்று நினையாதிருப்பானாக" என்று அப்போஸ்தலன் கூறுகிறார் (யாக். 1 : 7). ஆண்டவராகிய இயேசு ஜலத்தின்மேல் நடக்கிறதைப் பேதுரு பார்த்தபோது தேவவல்லமையை விசுவாசித்து, "நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்" என்று வேண்டிக்கொண்டார். விசுவாசத்தைக் கனம்பண்ணும் கர்த்தராகிய இயேசு, 'வா' என்றார். அவ்விதமே பேதுரு, படகை விட்டிறங்கி ஜலத்தின்
மேல் நடந்தார். ஆனால் சீக்கிரத்தில் காற்று பலமாயிருக்கிறதைக் "கண்டு, … அமிழ்ந்துபோகையில்", ஆண்டவராகிய இயேசு, "ஏன் சந்தேகப்பட்டாய்" என்று கேட்டார் (மத். 14 : 26-31). இதிலிருந்து, பேதுரு முதலாவது விசுவாசித்து, பின்பு சூழ்நிலையைக் கண்டு சந்தேகப்பட்டார் என்று நாம் காண்கிறோம். ஆகவே சூழ்நிலை களைப் பாராமலும் சிந்தியாமலுமிருந்து, விசுவாசம் உள்ளவர்களாய் நாம் ஜெபத்திலே எவைகளைக் கேட்போமோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம்.

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஜெபம்பண்ண வேண்டும்

"நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" என நாம் வாசிக்கிறோம் (யோவான் 15 : 16). யோபு நீதிமானாக இருந்தபோதிலும் தன் வேதனை நேரத்தில், "ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறதுபோல, தேவனோடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்" என்று அங்கலாய்க்கிறான் (யோபு 16 : 21). இதிலிருந்து, பழைய ஏற்பாட்டில் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் மத்தியஸ்தர் ஒருவர் தேவையாயிருந்தார் என்று நாம் காண்கிறோம். இவ்விதம் மத்தியஸ்தர் இல்லாதிருந்த காலத்தைக் குறிப்பிடும் பொருட்டாக, கர்த்தராகிய இயேசு, சீஷர்களிடம், "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை" என்றார் (யோவான் 16 : 24).

இதற்காகவே கர்த்தராகிய இயேசு எல்லோரையும் மீட்கும் பொருளாகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து நமக்கும் தேவனுக்கும் மத்தியஸ்தரானார் (I தீமோ. 2 : 5, 6). நாம் நம்முடைய குறைகளினால் அழிக்கப்படாது அவைகளினின்று விடுதலையாக்கப்பட்டுப் பூரணராகும்படி அவர் நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார் (I யோவான் 2 : 1).

அன்றியும், பிதாவாகிய தேவன், "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" என்று கூறப் பட்டுள்ளது (பிலி. 2 : 10, 11). இவ்வசனத்தில் பிதாவானவர் குமாரனுக்கு, "எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத்" தந்தருளினதின் முக்கிய காரணத்தை நாம் காண்கிறோம். சகல ஜனங்களும் கர்த்தராகிய இயேசுவுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு, அவரைக் கர்த்தரென்று அறிக்கைபண்ணும்போது பிதாவாகிய தேவன் மகிமைப்படுகிறார். பிதாவாகிய தேவன் இந்த மேலான நாமத்தைக் குமாரனுக்குத்

தந்தருளி அவரைக் கனம்பண்ணுவது பிதாவின் ஒழுங்காக இருக்கிறது. ஆகவே நாம் குமாரனை அறிக்கைபண்ணி, அவர் நாமத்தின் மூலம் வேண்டிக்கொள்ளும்போது, குமாரனை மாத்திரமல்ல, பிதாவையும் மகிமைப்படுத்துகிறோம். ஆகையால், கர்த்தராகிய இயேசு யோவான் 14 : 13-இல், "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்" என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

ஆகவே, கர்த்தராகிய இயேசு நமக்கு மத்தியஸ்தராகி நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறபடியாலும், பிதாவானவர் தாம் மகிமைப்படும்பொருட்டு குமாரனுக்கு எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைக் கொடுத்திருக்கிற படியாலும், நாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் விண்ணப்பம் பண்ணவேண்டும். இந்த இரகசியத்தை அறிந்த அப். பேதுரு, அலங்கார வாசலண்டையில் பிச்சை கேட்டுக்கொண்டிருந்த சப்பாணியை, "இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" (அப். 3 : 6) என்று சொல்லி நடக்கச் செய்தது மாத்திரமல்ல, ஜனங்கள் அதைக் குறித்து ஆச்சரியப்பட்டபோது, "அவருடைய நாமமே ... இவனைப் பெலப்படுத்தினது" என்று சொல்லி (வச. 16), கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைக் கனம்பண்ணி, அவருடைய நாமத்தினால் ஜெபம்பண்ண வேண்டுமென்பதையும் நமக்குக் காண்பித்திருக்கிறார். அன்றியும், "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று கர்த்தராகிய இயேசு வாக்குப்பண்ணியிருக்கிறபடியினால் (யோவான் 14 : 14), கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் ஜெபம்பண்ண மறவாதீர்.

இம்மட்டும் நாம் எவ்விதம் ஜெபம்பண்ண வேண்டும் என்பதற்கான சில குறிப்புகளைப் பார்த்தோம். இனிமேல் நாம் ஏன் ஜெபம்பண்ண வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திப்போமாக.

ﬕﬕﬕﬕﬕﬕﬕﬕ

அதிகாரம் 4

நாம் ஏன் ஜெபம்பண்ண வேண்டும்?

ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜெபமானது, மனுஷன் ஜீவிப்பதற்கு இன்றியமையாத சுவாசத்திற்கு ஒப்பிடப் படுகிறது என நாம் முன்னரே கண்டோம். இவ்வதிகாரத்தில் நாம் ஏன் ஜெபம்பண்ணவேண்டும் என்பதை ஆராய்வோம்.

1. நாம் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படியாக :

"நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக் களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்" என அப். பவுல் கூறுகிறார் (I தீமோ. 2 : 1,2). மேற்கூறிய வசனத்தின்படி தேவனுடைய பிள்ளைகள் கலகமில்லாமல் அமைதலுள்ள

ஜீவனம்பண்ண விரும்புகிறார்கள். எனினும் ஜெபஜீவியம் இல்லாமையால் தேசத்தில் அடிக்கடி கலகங்கள் உண்டாகி அமைதலற்ற ஜீவனம்பண்ண வேண்டியதாகிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் ஆயி பட்டணத்தைப் பிடிக்கச் சென்றபோது தோல்வியடைந்து கலங்கினார்கள். ஆகையால், யோசுவா கர்த்தரின் பெட்டிக்கு முன்பாக விழுந்து ஜெபம் பண்ணினான் (யோசுவா 7 : 6 - 9). இதன் பின்பு 10 - ஆம் வசனத்தில், "அப்பொழுது கர்த்தர் யோசுவாவை நோக்கி" என்று வாசிப்பது நமக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுக்கிறது. கர்த்தர் யோசுவாவிடம் அவன் செய்ய வேண்டிய காரியங்களைச் சொல்லிக் கொடுத்தார். அவன் அப்படியே செய்தான். இஸ்ரவேலர் ஆயி பட்டணத்தைச் சுட்டெரித்து, பூரண ஜெயத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

அன்றியும், யோசபாத் தனக்கு எதிராக வந்த சத்துருக்களினிமித்தம் பயந்தபோது, "எங்கள் தேவனே, ... எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை" என்று சொல்லி கர்த்தருக்கு முன்பாக நின்றபோது (II நாளா. 20 : 3, 12, 13), கர்த்தர் அவர்கள் செய்ய வேண்டியவற்றைச் சொன்னார். அவர்கள் அப்படியே செய்தபடியால் கர்த்தர் அவர்களை, அவர்கள் சத்துருக்களின்மேல் களிகூரச் செய்தார். அன்றியும் அவர்கள், "மகிழ்ச்சியோடே எருசலேமுக்குத் திரும்பினார்கள்" (வச. 27).

மேற்கூறிய சந்தர்ப்பங்களில், கலக்கங்கள், பயம் முதலியவை நீங்கி மகிழ்ச்சியோடு ஜீவியம் செய்வதற்குக் காரணமாக இருந்தது ஜெபமே. தானியேல், எஸ்தர், மொர்தெகாய் முதலியோர் ஜெபம்பண்ணினபடியால், தாங்கள் ஜெயம் அடைந்து கலகமின்றி அமைதலுள்ள ஜீவனம்பண்ணினது மாத்திரமல்ல, இராஜாக்களும் அவர்களிடம் அன்புகூர்ந்து அவர்களைக் கனம்பண்ண ஏதுவாயிருந்தது. எனவே நாமும் இராஜாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்காகவும் ஜெபங்களை ஏறெடுப்போமாக.

2. சோதனைக்குட்படாதிருக்கும் பொருட்டு :

"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" (மத். 26 : 41). தேவனுடைய பிள்ளைகளில் சிலர் சோதனை என்னும் வார்த்தையைக் கேட்கும்போதே பயந்து, சோதனைகள் தங்களுக்கு வராதபடி தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஆனால் நாம் சோதனைக்குட்படாதிருக்க அல்லது சோதனைக்குள் பிரவேசியாதிருக்க ('enter not into temptation') வேண்டுமேயன்றி, சோதனை இல்லாதவர்களாய் இருக்கவேண்டுமென்று கர்த்தராகிய இயேசு சொல்லவில்லை. ஆனால், "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" என்று நாம் யாக்கோபு 1 : 12 - இல் வாசிப்பதால், ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ளும்படி சோதனை அவசியம் என்று நாம் காண்கிறோம். ஒரு மாணவன் உயர்ந்தவகுப்பிற்குப் போகுமுன் பரீட்சை அல்லது சோதனை அவனுக்கு எவ்வாறு அவசியமோ அவ்வாறே தேவனுடைய பிள்ளைகளுக்கும் ஆவிக்குரிய ஜீவியத்தில் மேன்மையடையும்படி சோதனைகள் தேவை.

தானியேலும் அவனுடைய சிநேகிதரும் சோதிக்கப்பட்ட பின்பு, அவர்கள் காரியம் ஜெயமாயிருந்தது மாத்திரமல்ல, கர்த்தருடைய நாமமும்

மகிமைப்பட்டது. கர்த்தராகிய இயேசு சோதிக்கப்பட்ட பின்பு, தூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள் (மத். 4 : 11). இச்சந்தர்ப்பத்தில் அவர் தம் முதலாவது சோதனைக்கு முகங்காட்டுவதற்கு முன்பு, உபவாசித்து ஜெபம்பண்ணினார். அதனால் அவர் அங்கு பூரண ஜெயமடைந்தார். தம் கடைசி சோதனைக்கு முன்பாகவும் கெத்செமனேயில் அவர் ஜெபம்பண்ணினதாக நாம் காண்கிறோம். சீஷர்களுக்கும் சோதனை வந்தது. கர்த்தராகிய இயேசுவுக்கு வந்த சோதனை, சீஷர்களுக்கு வந்த சோதனையைப் பார்க்கிலும் எல்லா விதத்திலும் கொடியதாய் இருந்தது; அவர் தனிமையாக முழு உலகத்தின் பாவங்களையும் சுமந்து, பிதாவினாலும் கைவிடப்பட்டுப் பாவநிவாரணத்தை உண்டுபண்ண வேண்டியதாயிருந்தது. எனினும் அவர் அசதிக்கும் தூக்கத்திற்கும் இடங்கொடாது ஜெபம்பண்ணினபடியால், ஒரு சிறு பிழையும் விடாது, மகிமையாய் மரணத்தை ஜெயித்தார். ஆனால் சீஷர்கள் ஜெபம்பண்ணாமல் தூங்கினபடியால் சோதனையில் தோல்வியடைந்தனர்; பேதுரு கர்த்தரை மறுதலிக்கவும் சபிக்கவும் நேர்ந்தது.

தானியேல் தனக்கு முன்பாக சோதனை வைக்கப்பட்டிருந்ததை அறிந்தபோது, அவன் தனக்கு இராஜ்யத்தில் இருந்த மிக உயர்ந்த பதவியின் மேல் தன் நம்பிக்கையை வைக்காமல், தேவனையே நம்பி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான் (தானி. 6 : 3, 10). ஆகவே கர்த்தர் அச்சோதனையில் அவனுக்கு ஆச்சரியமான ஜெயத்தைக் கொடுத்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தினார். இவ்விதமாகவே நாம் சோதனை வேளைகளில் ஜெபம்பண்ணு வோமாயின் எவ்விதக் கொடிய சோதனையாக இருப்பினும், பட்சபாதமில்லாத தேவன் நமக்குப் பூரண ஜெயமளிப்பார். இந்த ஜெயத்தை அனுபவித்த அப். பவுல், "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாயிருக்கிறோமே" என்று ஜெயத்தொனி முழக்குவது நம்மைத் தைரியப்படுத்துகிறதல்லவா! (ரோமர் 8 : 37).

3. கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட :

"ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார்" (லூக்கா 21 : 36).

கர்த்தராகிய இயேசு தாம் மறுபடியும் வருவதைப்பற்றியும், அதற்கு முன்பு நிறைவேறும் அடையாளங்களைப் பற்றியும் லூக்கா 21-ஆம் அதிகாரத்தில் சொன்னார். அவர் வருகையில் அவருக்காக ஆவலோடு காத்திருக்கிறவர்கள் (எபி. 9 : 28), அவரைச் சந்திக்க அவருக்கு எதிர்கொண்டுபோய், மேகங்கள்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, என்றென்றும் அவரோடிருப்பார்கள் என்று ஆவியானவர் I தெசலோனிக்கேயர் 4 : 16, 17 - இல் சொல்லுகிறார். ஆ! இது என்ன பாக்கியம்!! இவ்விதமாக நம் மணவாளனை ஆகாயத்தில் நாம் சந்திக்க வேண்டுமாயின், எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருக்க வேண்டும்.

கர்த்தராகிய இயேசு சொன்ன அடையாளங்களையும் (மத். 24 : 3 - 14), உலகத்தில் நடக்கும் சம்பவங்களையும் நாம் கவனிக்கும்போது, அவர் அதிசீக்கிரமாய் வருகிறார் என்பது மிக நிச்சயமாகும். உலகில் இன்று பஞ்சங்கள், கொள்ளைநோய்கள் முதலியவை சாதாரணமாயிற்று. உலகத்தின் பல பகுதிகளிலும் பூமியதிர்ச்சிகள்

உண்டாவதைப் பற்றி நாம் செய்தித்தாள்களில் அடிக்கடி வாசிக்கிறோம். முழு உலகமும் யுத்தங்களின் செய்தியால் நிறைந்திருக்கிறது. வானத்தில் அநேக அடையாளங்கள் காணப்படுகின்றன. சில வருடங்களுக்கு முன்பு நியூயார்க் பட்டணத்தில் வானத்தில் ஒரு நீண்ட வெளிச்சம் திடீரெனக் காணப்பட்டு, ஏறக்குறைய முப்பது நிமிடங்கள் அப்படியே இருந்தது. ஆசிரியர்கள் மாணவர்களை வகுப்பறைகளிலிருந்து வெளியே அழைத்து அதைக் காண்பித்தனர். யூதரைப் பற்றிய செய்தி மிக முக்கியமானது. அவர்கள் இராஜ்யத்தைப் பெற்று நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ச் செழித்தோங்குவதை இங்கு வரையாமலேயே நீங்கள் அறிவீர்கள். “அறிவும் பெருகிப்போம்” என்னும் இன்னொரு அடையாளமும் தானியேல் 12 : 4 - இல் கூறப்பட்டுள்ளது. அனுதினமும் பெருகி வருகிற நவீன கண்டுபிடிப்புகளின் மூலம் இவ்வடையாளமும் நிறைவேறி வருகிறதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

கிறிஸ்தவர்களின் மத்தியில் கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பி அநேகரை அற்புத அடையாளங்களால் வஞ்சிக்கிறார்கள். அநேகருடைய அன்பு தணிந்துபோகிறது (மத். 24 : 4, 5, 11, 12). அன்றியும் மனுஷர் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அதின் பெலனை மறுதலிக்கிறார்கள் (II தீமோ. 3 : 1-5). ஒரு சிறு கூட்டத்தார் பரிசுத்தத்தை வாஞ்சித்துப் பரிசுத்தத்திலும், பெருங்கூட்டத்தாராகிய மற்றவர்கள் அக்கிரமத்திலும் வளருகிறார்கள். ஜனங்கள் இந்நிலையில் இருக்கும்போது, “இதோ, சீக்கிரமாய் வருகிறேன்” என்று கர்த்தர் சொல்லுகிறார் (வெளி. 22 : 11, 12).

நாம் கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும்பொருட்டாக, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் நினையாத நாழிகையிலே வருவதாகச் சொல்லியிருக்கிறார் (மத். 24 : 44). அவ்விதம் விழித்திருக்கிறவர்கள் மாத்திரமே அவரைச் சந்திக்க அவருக்கு எதிர்கொண்டு போவார்கள் என்பதைக் காண்பிக்கும் பொருட்டு, அவர், “ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான்” என்று சொன்னார். பலர் ஒன்றாக ஒரு இடத்தில் இருந்தாலும், யாருடைய காதில் கம்பியில்லாத் தந்தியின் கருவி (receiver of the wireless) வைக்கப்பட்டிருக்கிறதோ, அவருக்கு மாத்திரமே மறுபக்கத்திலிருந்து கொடுக்கப்படும் செய்தி கேட்கும். அவ்விதமே எப்போதும் ஜெபம்பண்ணி விழித்திருக்கிறவர்களுக்கு மாத்திரமே, நினையாத நேரத்தில் மணவாளன் எக்காளத்தொனியுடன் வரும் சத்தம் கேட்கும். இச்சத்தத்தை இவர்கள் கேட்டவுடன், அவரைச் சந்திக்க ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாகி (I கொரி. 15 : 51), அவருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாக எப்பொழுதும் அவருடனேகூட இருப்பார்கள் (I தெச. 4 : 17). எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருந்தால், கர்த்தராகிய இயேசு வரும்போது ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு எப்பொழுதும் அவருடனேகூட இருப்போம். அல்லேலூயா! அல்லேலூயா!! ஆமென்.